# LAABH SAMACHAR

Volume: 09 Issue : 07 OCTOBER 2020 Tamil & English Monthly Price: Rs. 10/-
official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE




## RELAX

## A Friendly Meet with Members



SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்
வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

# Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems




# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Uses second hand Woven bags also available

37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014





Thirumalay Tradings
presents

V Carry Bags

MINIMUM ORDER
10 TO 100 BAGS.

LOGO PRINTED
MINIMUM ORDER 750 BAGS

To Order: 94438 31496

Plot No.2, Anandha Nivas,
Palanimuthu Nagar,
Villapuram,
Madurai - 625 012. TN. India



Prop:
S.M. Karthikumaran

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ஃகோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

நமது சமூகத்தின் பெருமைமிக்க அடையாளமாக கருதப்படும் ஸௌராஷ்ட்ரா கூட்டுறவு வங்கி வளர்ச்சிக்கு டயர் 1 கேபிடல் நிதி தேவைக்கு, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் வேண்டுகோளுக்கு இணங்க நிதி அளித்த நமது உறுப்பினர்களுக்கு மீண்டும் ஒரு முறை இதழின் வாயிலான நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கொடை அளித்த நல் உள்ளங்களுக்கு ஸௌராஷ்ட்ரா கூட்டுறவு வங்கி சார்பாக பங்குப்பத்திரம் வழங்கப்பட்டது. இதனை அனைவரும் பெற்றிருப்பீர்கள் என்று நம்புகிறேன். தொடர்ந்து வங்கி வளர்ச்சிக்கு இணைந்து செயல்பட கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக சேம்பர் வளாகத்தில் நமது மாதாந்திர கூட்டங்கள் நடத்தப்படாமல் ஜூம் காணொலி செயலி வழியாக நடத்தப்பட்டு வந்தன. அரசு அறிவித்த ஊரடங்கு தளர்வின் அடிப்படையில் மீண்டும் சேம்பர் வளாகத்தில் நடைபெறத் துவங்கியுள்ளது. ஆகவே, உறுப்பினர்கள் சேம்பர்-ன் அழைப்பினை ஏற்று கலந்து கொண்டு பயனடைய கேட்டுக்கொள்கிறது. கொரோனா குறித்த அச்சம் விலகும் வரை அரசு உத்தரவுப்படி சமூக இடைவெளியை பின்பற்றி, முகக்கவசத்தை அணிந்து 50 நபர்களுக்கு மிகாமல் கூட்டங்கள் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆனால், குடும்பத்துடன் கலந்து கொள்ளும் நமது சேம்பர் ஆண்டுவிழா மட்டும் இந்த ஆண்டு கொரோனா ஊரடங்கு உத்தரவை கருத்தில் கொண்டு ரத்து செய்யப்படுகிறது. அடுத்த ஆண்டு நிச்சயம் இந்த அசாதாரண சூழலில் இருந்து இந்த உலகம் மீண்டு, இயல்பு நிலைக்கு மாறும் என்று நம்புகிறேன்.

தீப-ஒளியாம் தீபாவளித் திருநாளில், ***கொரோனாவை தீபம் விழுங்கட்டும்; நல்வழியை ஒளிச்சுடர் காட்டட்டும்*** என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். அனைவரும் ஒன்றிணைவோம். குடும்பத்துடன் கொண்டாடுவோம். தீபாவளி நல்வாழ்த்துக்கள். நன்றி

**– குமரன் B ஜகுவா**

## திருக்குறள்

**ஒவ்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்**

ஸௌராஷ்ட்ர மொழியில்
பஹெனினு ஜனனு ஜனிதெக்வேறார் ஹிப்$^{3}$பி$^{3}$
ஜனாருக் முஸீனாத்தெ ந்ஹீ

**பொருள்:** (அப்படி அளந்து) தம்மால் எவ்வளவு முடியும் என்பதை அறிந்துகொண்டு அந்த அளவோடு நின்று செய்கிறவருக்கு நடக்காத காரியம் ஒன்றுமில்லை.

அதிகாரம் 48 | வலியறிதல் (தனக்குள்ள சக்தியின் அளவை அறிவது) | அரசியல்

# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

**26.09.2020** – ஸௌராஷ்ட்ரா கூட்டுறவு வங்கி வளர்ச்சிக்கு நிதி அளித்த ஸௌராஷ்ட்ர சேம்பர் உறுப்பினர்களுக்கு பங்கு பத்திரங்கள் வழங்கப்பட்டன. ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி இதற்காக ஏற்பாடு செய்த விழாவில் மாண்புமிகு தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. **செல்லூர் கே. ராஜு** அவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார். சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**27.09.2020** – ஸௌராஷ்ட்ரா சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 5வது செயற்குழு கூட்டம் மாலை 6 அளவில் நாயகி மந்திர்-ல் நடத்தப்பட்டது. இதில் சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. ஜகுவா அவர்கள் தலைமை தாங்கினார்.

**06.10.2020** – கொரோனா பெருந்தொற்று காரணமாக மாதாந்திர தொழில் கூட்டம் சேம்பர் வளாகத்தில் நடத்தாமல் ஜூம் செயலியில் நடைபெற்று வந்தன. நீண்ட இடைவெளிக்குப் பிறகு சேம்பர் ஹாலில் நடத்தப்படும் நிகழ்ச்சி என்பதால் அங்கத்தினர்கள் பங்கேற்கும் ஒரு சந்திப்புக்கூட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சேம்பர் முன்னாள் தலைவர் திரு. S.K.R. **ரமேஷ்** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. ஜகுவா அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். நிகழ்ச்குழுத் தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**11.10.2020** – மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. **S.S. சரவணன்** அவர்களின் தலைமையிலான **SSS-91 Batch**-ன் சார்பாக கொரோனா நிவாராணம் அளித்த கொடையாளர்களுக்கு நன்றி பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நமது சேம்பர் உறுப்பினர்களிடமிருந்து பெற்ற தொகையை, நிவாராணப் பொருட்களாக SSS-91 Batch மூலம் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு அளித்ததன் காரணமாக, நமது சேம்பருக்கு விருது வழங்கி கௌரவிப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். சேம்பர் பெற்ற இந்த கௌரவம் மற்றும் விருது சேம்பருக்கு நன்கொடை அளித்த நல்உள்ளங்களை சாரும்.

நன்றி

– K.K. **தினேஷ்**

# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

நமது சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துகள். நாட்டில் மக்கள் அனைவரும் மன அமைதி, உடல் ஆரோக்கியம் பெற்று அனைத்திலும் வெற்றிபெற இந்த தீப ஒளித்திருநாளில் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

நமது இந்திய அரசு டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு மிகுந்த முக்கியத்துவத்தை அளித்து வருகிறது. நமது பாரதப்பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், செயற்கை நுண்ணறிவு திறன் கொண்ட நான்காம் தொழில் புரட்சி 4.0-யை சமீபத்தில் **RAISE 2020** - (Responsible Artificial Intelligence in Social Empowerment) Virtual Global Summit on AI by India என்ற கருத்தரங்கின் மூலம் நாட்டிற்கு அர்பணித்தார். இது குறித்து எளிமையான விளக்கத்துடன் இந்த இதழில் காணலாம்.

நமது மத்திய மாநில அரசுகள், விவசயாம் சார்ந்த துறைகள் (உணவு பதப்படுத்தல் உட்பட), சோலார் உற்பத்தி, ராணுவ தளவாட உற்பத்தி, மின்சார வாகன உற்பத்தி போன்ற துறைகளை ஊக்குவிக்க மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது. இதற்காக மானியங்களை வழங்கி வருகிறது. புதிய தொழில் துவங்க ஆர்வமுள்ளவர்கள் இது போன்ற துறைகளில் ஈடுபட்டு வளர்ச்சி பெற வாய்ப்பாக அமையும்.

பல்வேறு நல்ல சீர்திருத்தங்களை இந்த காலகட்டத்தில் மத்திய அரசு கொண்டு வந்து கொண்டிருக்கிறது. சீரான பாரதத்தை அடுத்த 20 ஆண்டுகளில் காண முடியும் என்று நம்புகிறேன்.

வாழ்க பாரதம்!...

- B.S. **ஜெனார்த்தனன்**




## தேசிய அமைப்பான FASII-யில் உறுப்பினர் சேர்க்கை அறிவிப்பு

டெல்லியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் தேசிய அமைப்பான The Federation of Associations of Small Industries of India (FASII) யில் உறுப்பினர் சேர்கை நடைபெறுகிறது. 1953ம் ஆண்டு இந்தியாவில், சிறு, குறு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஃபோர்டு நிறுவனத்தின் பரிந்துரையால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய அமைப்பு FASII.

அனைத்து தொழிற்சங்கம் மற்றும் மாநில அரசாங்கங்களின் குறு மற்றும் சிறு நிறுவனங்களுடன் தொடர்புடைய அனைத்து கவுன்சில்கள் மற்றும் குழுக்களில் இந்த கூட்டமைப்புக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது.

மத்திய அரசின் இ.எஸ்.ஐ.,மற்றும் பி.எஃப்., துறைகள், ஏற்றுமதி வர்த்தகத்துறை, MSME, மத்திய நேரடி வரித்துறை போன்ற பல்வேறு அரசுத்துறைகளில் இந்த அமைப்பிற்கு பிரதிநிதித்துவம் உள்ளது.

ஆகவே, இதில் இணையும் நமது சேம்பர் உறுப்பினர்கள், மத்திய அரசுடனான ஒரு நெருக்கத்தை எளிதில் பெற முடியும். மேலும், தொழில் துறையினர்களின் கோரிக்கைகள் மற்றும் பிரச்சனைகளை எளிதில் அரசின் பார்வைக்குக் கொண்டு சென்று சீர் செய்ய முடிகிறது.

இந்த அமைப்பில் இணைந்து பயன்பெற முதலில் தங்கள் தொழிலை MSME-யில் பதிவு செய்தவராக இருப்பது அவசியம். சேம்பர் அலுவலகத்தில் விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளலாம். **தகவலுக்கு: 98409 60845**


- K.K.G. பிரபாகரன்
National Hony. Treasurer, FASII,
Publisher, Laabh Samachar

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk



# RELAX

## A Friendly Meet with SKR




கொரோனா பெருந்தொற்று காரணமாக நீண்ட நாட்களாக சேம்பர்-ன் மாதாந்திர கூட்டங்கள் சேம்பர் வளாகத்தில் நடத்தாமல் ஜூம் காணொலி செயலியில் நடத்துப்பட்டு வந்தன. தற்போது நீண்ட இடைவெளிக்குப்பிறகு முதன் முறையாக சேம்பர் வளாகத்தில் சமூக இடைவெளியை பின்பற்றி, குறைந்த இருக்கையுடன் கடந்த 06.10.2020 மாலை 6.00மணி அளவில் நடத்தப்பட்டது. கூட்டத்திற்கு அனைவரும் முகக்கவசத்துடன் வந்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியை சேம்பர் நிகழ்ச்சிக்குழுத் தலைவர் திரு. T.R. சரவணன் அவர்கள் ஏற்பாடு செய்தார். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமைத் தாங்கினார்.

பல நாட்களுக்குப்பின் அங்கத்தினர்களை நேரில் சந்திக்கும் நிகழ்ச்சி என்பதால் தொழில் குறித்த கூட்டமாக நடத்தாமல், ஒரு நண்பர்கள் சந்திப்புக் கூட்டமாக நடத்தப்பட்டது.

இதில் சேம்பர் முன்னாள் தலைவரும், ரமேஷ் காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ்-ன் உரிமையாளருமான திரு. S.K.R. ரமேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக தொழில் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள நம் தொழில் முனைவோர்கள் தங்கள் மன அழுத்தத்திலிருந்து வெளிவர முற்றிலும் பொழுதுபோக்கு அம்சத்துடன் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

கனமழை காரணமாக அங்கத்தினர்களின் வருகை குறைவாக இருந்தாலும், இந்நிகழ்ச்சி ஜூம் காணொலி செயலி வழியாகவும் ஒளிபரப்பப்பட்டது. அதில் அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திரு. S.K.R. ரமேஷ் அவர்கள் சேம்பர் சார்பாக பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். சேம்பர் பொதுச்செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.







Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633


ஒரு மாஸ்க்கை 8 மணி நேரம் மட்டுமே அணியலாம்



https://youtu.be/-JMVniVMLr0


PANDIAN
PERFORMANCE CHEMICALS
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098
Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care
droplets
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
ALPHA OLEPHIN SULPHONATES
SODIUM LAURYL ETHER SULPHATES
SODIUM LAURYL SULPHATES
CETOSTEARYL ALCOHOLS
FATTY ALCOHOLS
OLEO CHEMICALS
POLYMERS
PERFORMANCE CHEMICALS &
FRAGRANCES
Godrej
Godrej Industries Limited
IFF
International Flavours & Fragrace Pvt. Ltd
Dealers in
K K Dinakaran
www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com
Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831



## சேம்பர்-ன் 5வது செயற்குழு கூட்டம்



நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 5வது செயற்குழு கூட்டம் கடந்த 27.09.2020 அன்று மாலை 6 அளவில் ஸ்ரீமந் நாயகி வித்யா மந்திரில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நமது சேம்பர் முதுநிலைத்தலைவர் திரு. K.V. பாலா அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

சேம்பர் ஆயுட்கால உறுப்பினர்களுக்கு புதிய வடிவில் உறுப்பினர் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இதற்கு முன் சான்றிதழ்கள் பெற்ற ஆயுட்கால உறுப்பினர்களுக்கும் இது வழங்கப்படும்.

சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் அறுசுவை உணவு ஏற்பாடு செய்தார்; கூட்டம் நடத்துவதற்கான இடத்தை அளித்தார். இந்த கூட்டம் சமூக இடைவெளியை பின்பற்றி நடத்தப்பட்டது.

## நன்றி பாராட்டு விழா



படம்-1: சேம்பர் பொதுச்செயலாளர் திரு. K.K. *தினேஷ்* அவர்கள் உரையாற்றுகிறார்.
படம்-2: சேம்பர் முன்னாள் தலைவர் திரு. S.K.R. *ரமேஷ்* அவர்கள் விருதை பெருகிறார். உடன் சேம்பர் நிர்வாகிகள்.

கொரோனா பெருந்தொற்றினால் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் அளிப்பதற்காக கடந்த மே மாதம் சேம்பர் அங்கத்தினர்களிடம் இருந்து ரூ. ஒரு லட்சம் திரட்டி, நமது சமூகத்தின் மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. **S.S. சரவணன்** அவர்களின் தலைமையிலான **SSS-91 Batch** மூலம் ஸௌராஷ்ட்ரா ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பொதுமக்களுக்கு நிவாரணப்பொருட்கள் வழங்கப்பட்டது.

இதற்கு, **SSS-91 Batch** சார்பில் நன்கொடையாளர்களுக்கு நன்றி பாராட்டு விழா 11.10.2020 அன்று ஸௌராஷ்ட்ரா ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இதில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ஐ பாராட்டி விருது வழங்கப்பட்டது. சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## NEXTGEN PROGRAM

இளைய தலைமுறை தொழில்முனைவோர் கூட்டமைப்பான NEXTGEN, **NEXTGEN REBOOT - 9th TEAM Meet** கடந்த 14.09.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் நடைபெற்றது. கொரோனா பெருந்தொற்று ஊரடங்கு காரணமாக ஜூம் செயலி வழியாக கூட்டங்கள் நடைபெற்று வந்த நிலையில், நீண்ட இடைவெளிக்குப்பிறகு முதன் முறையாக நேரில் உறுப்பினர்களை நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த கூட்டத்திற்கு NEXTGEN தலைவர் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் தலைமைத் தாங்கினார். கூட்டத்தை NEXTGEN செயலாளர் திரு. T.R. சரவணன் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

## WEBSITE FOR SCC MEMBERS AT OFFER PRICE

**நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் உறுப்பினர்களின் தொழில் வர்த்தக வளர்ச்சிக்காக சிறப்பு விலை ரூ. 365/- ல் வெப்சைட் உருவாக்கித் தருகிறது. அனைத்து தொழில் துறை சார்ந்த அங்கத்தினர்களும் இதில் இணைந்து தொழில் அபிவிருத்தி செய்து கொள்ளலாம்.**

**விபரங்களுக்கு: 93441 97952 , 80566 56889**


ஸ்ரீ முருகன் துணை

K.S. மோகன்லால்





**ஹரிலால்**

பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்

குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்

98430 72626
98425 72626

- செங்கல்
- மணல்
- ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
- கிராவல்
- கிரஷர் தூசி
- சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
- உடைகல்

No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை - 9

# சல்பா இண்டஸ்ட்ரீஸ்

**வீட்டு உபயோகப் பொருட்கள்**

18–ஏ, வெங்கலக்கடைத் தெரு, மதுரை – 1. போன்: 0452 4250844
63/5, விரகனூர், மகாராஜன் நகர், ராமநாதபுரம் ரோடு, மதுரை – 9.
செல்: 98945 44813

**கீழ்கண்ட வீட்டு உபயோகப் பொருட்கள்
மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.**



K.K.Karunakaran
Mobile : 98409 60844
82206 94087
Factory : 98945 44813

- பினாயில் காம்பவுண்ட்
- டாய்லட் கிளினர்
- சோப் ஆயில்
- வாஷிங் லிக்யூட்
- டாய்லட் கிளீனர் (ஹார்பிக்)
- தரைசுத்திகரிப்பு ஆயில் (லைசால்)
- பாத்திரம் சுத்தம் செய்யும் ஆயில் (ப்ரில்)
- ஹாண்ட் வாஷ் லிக்யூட்
- ஆசிட் சிலர்ரி
- பிளிச்சிங் பவுடர்
- வாஷிங் சோடா
- காஸ்டிக் சோடா
- டிஸ்டில்டு வாட்டர்
- வாஷிங் பவுடர் செட்
- டிடர்ஜண்ட் பவுடர்
- ஒயிட் பினாயில்
- டிஸ்வாஸ் கேக்
- டிடர்ஜண்ட் சோப்ஸ்
- ஓம வாட்டர்
- டினோ பால்
- பாத்ரூம், டாய்லட் சம்பந்தபட்ட பொருட்கள் வாசனை திரவியங்கள் மற்றும் இதர கெமிக்கல்கள்






# ஆழியில் பாய்ந்துவரும் தகவல்கள்

இணையம், இணையவழித் தகவல் தொடர்பு என்றவுடன் செயற்கைக்கோள்களே நம் நினைவுக்கு வரும். கூகுளில் நாம் தேடும் ஒரு தகவல் அப்படியே வான்வழியாகப் போய் ஒரு செயற்கைக்கோளில் மோதி, பின்னர் அமெரிக்காவில் இருக்கும் ஏதோ ஒரு கணினியுடன் பேசி நமக்குத் தகவல் வருவதாக நம்மில் பெரும்பாலோர் நினைத்துக்கொண்டிருப்போம்.

உண்மையில் 90 சதவீதத்துக்கும் மேலான இணையப் போக்குவரத்து கடலடித் தகவல் தொடர்புக் கம்பிகள் (Submarine communication cables) வழியாகவே நிகழ்கிறது.

இதில் பல நன்மைகள் இருக்கின்றன. கண்ணாடி இழைக் கம்பிகள் (Fibre-Optic Cables) மூலம் தகவல் கடத்தப்படுகையில் ஒளியின் வேகத்தில் நம்மால் தகவல்களை அனுப்ப முடியம். மேலும், ஒரே கம்பியில் வேறு வேறு துடிப்பெண் (Pulsation), வேறு வேறு அளவீடுகள் தகவல்களை அனுப்ப முடியும். இதுவே செயற்கைக்கோள் தகவல் தொடர்பில் அதிக நேரம் பிடிக்கும் செயல்பாடாக மாறிவிடும். மேலும், அதற்கான கற்றை ஒதுக்கீடுகளில் இவ்வளவுதான் அனுப்ப முடியும் என்ற வரைமுறையும் இருக்கும்.

கடலடித் தகவல் தொடர்புக் கம்பிகளை நிறுவன செலவும் நேரமும் ஆகும் என்றாலும், அது தரக்கூடிய பயன்களைச் சீர்தூக்கிப் பார்க்கையில் அவை மிக மலிவானவை. வரலாற்று ரீதியாகப் பார்த்தால், அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் இணைக்க, முதன்முதலில் தந்திக் கம்பிகளை அட்லாண்டிக் பெருங்கடலின் அடியில் பதித்தார்கள்; தந்திக் கம்பிகளில் உலோகத்தில் தகவல்கள் கடத்தப்படும். அந்தத் தொழில்நுட்பம் வளர்ந்து இன்று கண்ணாடி இழைக் கம்பிகளில் வந்து நிற்கிறது.




இந்தக் கண்ணாடி இழைக் கம்பியைச் சுற்றிப் பாதுகாப்பு அமைப்புக்காக வேறு வேறு பொருட்களாலான ஏழு அல்லது எட்டு அடுக்குகள் இருக்கும்.

கண்ணாடி இழைகள் ஒன்றோடொன்று உராய்ந்து பாதிக்கப்படாமல் இருக்க பெட்ரோலியம் ஜெல்லி; அதற்கு மேல் தாமிரம் அல்லது அலுமினியம்; அதற்குமேல் பாலிகார்பனேட் என்று வலுவான பிளாஸ்டிக் அமைப்பு; அதற்கு மேல் நீர் புகாமல் இருக்க அலுமினிய அமைப்பு; பிற காந்தப்புலங்களால் பாதிப்படையாமல் இருக்க மெல்லிய எஃகு இழைகள்; அதற்குமேல் மைலார் எனப்படும் உலோக பிளாஸ்டிக் கூட்டமைப்பால் ஆன அடுக்கு; அதற்கும் மேல் பாலித்தீனால் ஆன மேலடுக்கு. இது மொத்தமும் சேர்ந்து 3-4 அங்குல விட்டம் கொண்ட அமைப்பாக வரும். ஆனால், அதன் வேகம் ஒரு நொடிக்கு டெரா பைட் அளவீடுகளில் இருக்கும்.

அந்தக் கடலடிக் கம்பிகளை, சோனார் (Sonar) என்ற ஒலி அளவீட்டைக் கொண்டு கடற்படுகையைத் தெளிவாக ஆராய்ந்து பின்பே நிறுவுவார்கள். இந்தக் கம்பிகளை நிறுவவும், பழுதுநீக்கவும் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட கப்பல்கள் உண்டு.

நாடுகளுக்கும் கண்டங்களுக்கும் இடையில் இது நிறுவப்படுகிறது. ஏதேனும் காரணத்தால் அந்தக் கம்பிகள் துண்டிக்கப்பட்டால், பிற நாடுகளுடனான இணையத் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடும். அந்தக் கம்பிகளே உலகத் தகவல் ஓட்டத்தில் முக்கிய ரத்த நாளங்கள்.

அடுத்த முறை இணையத்தில் எதையாவது தேடுகையில் நாம் தேடும் தகவல், கடலில் மூழ்கி எழுந்து வெளியே வந்திருக்கிறது என்று நினைவில் வைத்துக்கொள்வோம்.!

– தி இந்து (த)

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence,
Business News / Information,
Govt. Notifictions, Amendments,
New Technology etc.,
**93441 97952**

சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்
**SRB சில்க்ஸ்**
158, தெற்கு மாசி வீதி,
மதுரை - 1.
Ph : 2320536

வாடிக்கையாளர்களின் சேவையில் 100 ஆண்டுகள் SRB சில்க்ஸ் Since 1901
ஸ்தாபிதம் 1901

ஆடவர் மற்றும் பெண்களுக்கான
பிரத்யேக ஆடையகம்
**SRB பொட்டிக் BOUTIQUE**
158-A, தெற்கு மாசி வீதி, மதுரை-1.
போன் : 4362111
135, 2வது கிழக்கு மெயின் ரோடு, அண்ணாநகர்,
மதுரை-20 போன் : 4961990

எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.






https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be

## Centre to waive 'interest on interest' on loans up to Rs 2 crore during moratorium

The government has told the Supreme Court that it will waive 'interest on interest' on loans up to Rs 2 crore during the six month loan moratorium. The waiver will prove to be a huge relief for small borrowers including micro, small and medium enterprises (MSMEs), and loans pertaining to education, housing, consumer durables, credit card dues, auto etc.

The Centre said in its affidavit submitted on Friday that the only solution is for the government to bear the burden of waiving of interest. "This category of borrowers, in whose case the compound interest will be waived, would be MSME loans and personal loans up to Rs 2 crore of the following category -- MSME loans, educational loans, housing loans, consumer durable loans, credit card dues, auto loans, personal loans to professionals and consumption loans," said the finance ministry.

The government had earlier refused to waive interest, stating that it would affect the banks. However, after a recommendation of a government panel, set up after the Supreme Court asked them to help borrowers, the Centre changed its stance.

The Reserve Bank of India had allowed borrowers to seek a six month moratorium on all loans due to the pandemic. However, the banks and housing finance companies continued to charge interest on the entire amount -- the principal and the interest liability.

The ministry said, "If the government were to consider waiver of interest on all types of loan advances to all categories of borrowers corresponding to the six-month period for which the moratorium, that is deferment of payment of instalments, was made available under the relevant RBI circulars, the estimated amount waived would be more than Rs 6 lakhs crore." It said that if banks were to take on that burden then a substantial part of their net worth would be wiped off.

"This was one of the main reasons why waiver of interest was not even contemplated and only payment of instalments was deferred," added the ministry. - Business Today

## From Jan 1, inform bank or large cheques will bounce

Come January 1, your cheque of a larger amount of Rs 50,000 and above will bounce unless you intimate your bank in advance on drawing up such a cheque. The new system introduces a double check on the cheque transactions.

The Reserve Bank of India (RBI) last week announced a new "Positive Pay" system for cheque truncation system (CTS) to prevent fraudsters emptying your bank account with fake cheques or tampering of your cheque leaves. The scheme involves a process of reconfirming key details of large value cheques.

If you are issuing a larger amount cheque, you are required to inform your bank about it electronically through channels like SMS, mobile app, Internet banking, ATM, etc., providing certain minimum details of that cheque like date, name of the beneficiary, payee and amounts.

These details will be cross-checked when the cheque is presented for payment in the CTS. Any discrepancy will be immediately flagged by CTS to the drawee bank and presenting bank, who would take redressal measures. The RBI advisory asks banks to make it mandatory in case of cheques for amounts of Rs 5 lakh and above.

Only those cheques that are compliant with the above instructions will be accepted under the dispute resolution mechanism at the CTS grids. Banks have been advised to implement similar arrangements for cheques cleared and collected outside CTS.

All scheduled commercial banks including regional rural banks, cooperative banks and small finance banks have been advised by the RBI to adopt the new scheme in the next three months to be ready for transition from January 1.

They have been also told to create adequate awareness among their customers on features of the positive pay system through SMS, display in branches, ATMs as well as through their website and internet banking.

- Free Press Journal, Mumbai








https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be

## தொழில்நுட்பப் புரட்சி – அடுத்த தலைமுறையினருக்கான தொழில் வாய்ப்புகள்

–எஸ்.எஸ். ராம்சுந்தர்

RAISE 2020
RESPONSIBLE AI FOR SOCIAL EMPOWERMENT

மத்திய அரசின் சமீபத்திய கொள்கைகளையும், வேலைவாய்ப்புகளையும் உற்று நோக்கிப் பார்த்தால், நமது நாடு எந்த திசையை நோக்கி சென்று கொண்டு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். செயற்கை நுண்ணறிவு (Artifical Intelligence) இதன் பயன்பாடு சமுதாய வளர்ச்சிக்கு பயன்படுத்த முனைப்புடன் செயல்படுகின்றது. சமீபத்தில் மத்திய அரசு **RAISE 2020** - (Responsible Artificial Intelligence in Social Empowerment) Virtual Global Summit on AI by India என்ற கருத்தரங்கை 5 நாட்கள் நடத்தியது என்பதை உங்களுக்கு தெரிந்திருக்கலாம்.

- **ECONOMY:** நமது பொருளாதாரத்தை 5 டிரில்லியன்களாக (ஒரு டிரில்லியன் = ஒரு லட்சம் கோடி) மாற்றுவது தற்போது நமது இந்திய பொருளாதாரம் மதிப்பு 2.30 லட்சம் கோடியாக உள்ளது.
- **EDUCATION:** கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்தி, எளிதாக அனைவருக்கும் ஏற்ற முறையில் பாடத்திட்டங்களை செயல்படுத்துதல்.
- **AGRICULURE:** விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்தி, விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவது.
- **HEALTH CARE:** உடல்நலம், மருத்துவத்துறையில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி அடித்தட்டு மக்களுக்கும் உயர்தர சிகிச்சை கிடைக்க வழிவகை செய்வது.
- **SKILLS & TRAINING:** இளைய சமூகத்தினர் தங்களுடைய திறமைகளை வளர்த்து கொள்ளவும், அவர்களுக்கு தேவையான பயிற்சிகளையும், தளங்களையும் உருவாக்குதல்.

நமது மத்திய அரசு இந்த Aritificial Intelligence–ல் முதலாவதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறது.

நமது மாநில அரசும், சமீபத்தில் "**ABC Policy**" - (Artificial Intelligence Blockchain Cybercrime) என்கிற புதிய தொழில்நுட்பக் கொள்கையை "CII Connect 2020" சந்திப்பில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவிலேயே முதல் மாநிலமாக இந்த கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது. நமது மாநிலம் தொழில் நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்பு தளம் (Technology and Innovation Hub) ஆக மாற்றுவதற்கு முனைப்புடன் செயல்பட இருக்கிறது.

மத்திய, மாநில அரசுகளின் இந்த துறையில் ஆதிக்கம் செலுத்தும் என்று நம்புவோமாக. இந்த வாய்ப்பை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகின்றோம் என்பது தான் இந்த கட்டுரையின் நோக்கம்.

நம்முடைய சமூகத்தினர் இந்தத் துறையில் அதிகமானோர் இருக்கின்றார்கள். தொழில் வாய்ப்பு, பல இளம் தொழில் அதிபர்களை உருவாக்கலாம். நம் கல்வி நிறுவனங்கள் இந்த துறையில் வல்லுனர்களை தயார்படுத்தலாம். அதற்குண்டான படிப்புகளைத் தொடங்கலாம்.

உற்பத்தியாளர்கள், தொழில்முனைவோர்கள், விவசாயிகள் தங்களுடைய துறைகளிலோ, நிறுவனங்களிலோ இதனை பயன்டுத்தி தங்களுடைய வணிகத்தை விஸ்தரிப்பதற்கோ, முன்னேற்றுவதற்கோ வாய்ப்புகள் உள்ளதா என்று ஆராய்ந்து இந்த பொன்னான வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு அங்கத்தினர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

நான்காவது தொழில் புரட்சியாக மின்னணு தொழில்நுட்ப சேவைகள் மாறும் என்பதால் பின்வரும் துறையில் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. Digital Connectivity, Cloud and Edge Computing, IOT and Smart Devices, AI, Robotics, Blockchain, AR/VR and Genomics. இது தவிர, Data Science, Machine Learning போன்ற துறைகளில் மகத்தான வாய்ப்புகள் உள்ளன. தொலைத்தொடர்பு, ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு, நிதி சேவைகள், கல்வி, உடல் நலம் மற்றும் விவசயாத்துறைகளில் பெரும் வளர்ச்சி உள்ளது. நம் சமுதாய இளம் தலைமுறையினர் மேற்கூறிய துறைகளில் தொழில் தொடங்க சேம்பர் உங்களை வாழ்த்துகின்றது. அரசு கொண்டு வரும் இது போன்ற, கொள்கை சார்ந்த திட்டங்களில் நம் தொழிலை மேம்படுத்திக்கொண்டால், தொழிலில் மிகப்பெரிய அளவில் வளர்ச்சியடையச் செய்ய முடியும்.

வெளியே செல்லும்போது மற்றவர்களிடம் இருந்து குறைந்தது 3 முதல் 6 தூரம் வரை தள்ளி இருப்பது நல்லது.




### ஸௌராஷ்ட்ரா கூட்டுறவு வங்கி

# பங்குத்தொகை சான்றிதழ் வழங்கும் விழா

ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களால் உருவான நமது பெருமைமிக்க ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கியின் நிதி மற்றும் நிர்வாக மேம்பாட்டிற்காக எமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், சேம்பர் அங்கத்தனர்கள் சிலரிடமிருந்து சுமார் ரூ. 55,000,00 (ரூபாய் ஐம்பத்தைந்து லட்சம்) வரை வசூல் செய்து வங்கியின் டயர் 1 கேபிடல் ஃபண்டிற்காக வங்கிக்கு வழங்கியது.

பெறப்பட்ட பணத்திற்கு பங்கு சான்றிதழ் வழங்குவதற்காக கடந்த 26.09.2020 அன்று காலை 10 மணி அளவில் அருணாச்சலாம் கமலாம்பாள் மஹாலில் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாவில், மாண்புமிகு தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர். கே. ராஜு அவர்கள் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி பங்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த விழாவில், ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி நிர்வாகிகள், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் மற்றும் புதிய பங்குதாரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த விழாவை ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி ஏற்பாடு செய்தது.

விழாவில், ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கித் தலைவர் Er. T.S. சாரதி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. A.G.S.ராம்பாபு, சேம்பர் முதுநிலைத் தலைவர் திரு. K.V. பாலா, சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா, கே.எல்.என். பாலிடெக்னிக் கல்லூரி செயலாளர் திரு. K.B. ராதாகிருஷ்ணன், ஸௌ. சேம்பர் முன்னாள் தலைவர் திரு. K.K.G. பிரபாகரன், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. M.S. பாண்டியன் மற்றும் Ex.-MLA திரு. O.S. அமர்நாத் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி வளர்ச்சிக்கும், மதுரை இரண்டாம் தலைநகர் குறித்தும் இரண்டு கோரிக்கை மனுக்கள் மேடையில் நமது நிர்வாகிகள் இணைந்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்களிடம் வழங்கினர்.

## நாளிதழ்களில்...



**சௌராஷ்டிரா கூட்டுறவு வங்கி உறுப்பினர்களுக்கு பங்குத் தொகை சான்று வழங்கல்**

மதுரை சௌராஷ்டிரா கூட்டுறவு வங்கியின் உறுப்பினர்களுக்கு பங்குத் தொகை சான்று வழங்கும் விழாவில் சனிக்கிழமை பேசிய அமைச்சர் செல்லூர் கே.ராஜூ.

மதுரை, செப். 26: சௌராஷ்டிரா கூட்டுறவு வங்கி உறுப்பினர்களுக்கு பங்குத் தொகை சான்றிதழ்களை கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ சனிக்கிழமை வழங்கினார்.

தமிழகத்தின் மிகவும் பழமையான நகர கூட்டுறவு வங்கிகளில் ஒன்றான சௌராஷ்டிரா கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனம், ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள வரையறைக்கு கீழ் சென்றது. இதே நிலை தொடர்ந்தால், வேறொரு கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்படக் கூடிய நிலை ஏற்பட்டது. அதையடுத்து சௌராஷ்டிரா தொழில் வர்த்தக சபை மற்றும் சௌராஷ்டிரா பிரமுகர்களின் முயற்சியில் பங்கு மூலதனமாக ரூ.55 லட்சம் திரட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த கூட்டுறவு வங்கி தொடர்ந்து செயல்படுவதற்கான நிலையை எட்டியுள்ளது.

இதையொட்டி, பங்குத் தொகை அளித்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி தெப்பக்குளம் பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

சௌராஷ்டிரா கூட்டுறவு வங்கித் தலைவர் டி.எஸ்.சாரதி தலைமை வகித்தார். பங்குத் தொகை வழங்கியவர்களுக்கு அமைச்சர் செல்லூர் ராஜூ சான்றிதழ்களை வழங்கினார்.

கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ராஜேஷ், முன்னாள் மக்களவை உறுப்பினர் ஏ.ஜி.எஸ்.ராம்பாபு, சௌராஷ்டிரா தொழில் வர்த்தக சபை தலைவர் குமரன் பி.ஜாகுவா, முன்னாள் தலைவர் கே.கே.ஜி.பிரபாகரன், கே.எல்.என்.பாலிடெக்னிக் கல்லூரி கவுன்சில் செயலர் கே.பி.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சௌராஷ்டிரா கூட்டுறவு வங்கியில் இணையவழி சேவைகளை அறிமுகம் செய்வது, சேமிப்புக் கணக்கு தொடங்கும் உறுப்பினர்களுக்கு மருத்துவக் காப்பீடு உள்ளிட்ட சேவைகளை அளிப்பது உள்ளிட்ட வங்கி நிர்வாகத்தைச் செம்மையாக மேற்கொள்வதற்கான பல்வேறு ஆலோசனைகள் சௌராஷ்டிரா தொழில் வர்த்தக சபை சார்பில் வலியுறுத்தப்பட்டது.



மதுரையில் சவுராஷ்டிரா கூட்டுறவு வங்கி பங்கு மூலதன சான்றிதழ் வழங்கும் விழாவை அமைச்சர் செல்லூரர் ராஜூ குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். அருகில் முன்னாள் எம்.பி. ராம்பாபு, அதிமுக. நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், திரவியம், மாணவரணி குமார், சாரதி உள்ளனர்.






ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் முதுநிலைத் தலைவர் திரு. K.V. **பாலா** அவர்கள் பேசுகிறார்.
அடுத்த படம் மாண்புமிகு அமைச்சர் திரு. **செல்லூர் கே. ராஜு** அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கிறார்.




இந்த விழாவில், சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் பேசியதாவது;

ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி, மதுரை மாநகர் மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ள தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தும் நோக்கோடு 1918ம் ஆண்டு ராஷ்டிரபந்து ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, பின்னாலில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் பெற்று அதன் பின் வந்த பல தலைவர்களின் முயற்சியாலும், தன்னார்வத்துடன் செயல்பட்ட இயக்குனர்களாலும், உறுப்பினர்களின் பங்களிப்பினாலும் செயல்பட்டு இன்று 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக அங்கத்தினர்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தற்போது ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கியானது தலைவர் Er. T.S. சாரதி அவர்களின் தொடர் முயற்சி மற்றும் அயராத உழைப்பினாலும் பல்வேறு இன்னல்கள், தடைகளைத் தாண்டி இன்று நமது வங்கி ஒரு பன்னாட்டு தரத்தில் செயல்படுவது போன்ற அமைப்பினை உருவாக்கித் தந்துள்ளார்.

கடந்த 14.01.2020 அன்று ஸ்ரீமான் L.K. துளசிராம் ஐயா அவர்களின் பிறந்தநாளினை நமது சேம்பரில் கொண்டாடிய தருணத்தில் நமது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. A.G.S. ராம்பாபு அவர்களுடன் வங்கி தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களுடன் எமது சேம்பரில் சந்தித்தார். வங்கியின் நிலை குறித்து எங்களிடம் எடுத்துரைத்தார்.

அந்த வகையிலே வங்கியின் செயல்பாடுகள் இன்னும் சிறக்க வேண்டுமென்றால் பங்கு மூலதனத்தை உயர்த்தியே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதை என்னிடம் வலியுறுத்திக் கூறினார். நமது சேம்பரில் முன்னாள் தலைவர்கள மற்றும் நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசித்து வங்கியின் மூலதனத்தை மேம்படுத்தும் பொருட்டு நம் சேம்பரில் உள்ள அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்தோம்.

இதன் பலனாக, இன்று நமது சேம்பரில் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் பல்வேறு உறுப்பினர்களின் உதவியுடன் நமது ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கிக்கு சுமார் 55 லட்சம் வரை பங்கு மூலதனத்தை உயர்த்தி கொடுத்துள்ளோம். இத்தருணத்தில் சேம்பரின் வேண்டுகோளுக்கிணங்கி வங்கிக்கு மூலதனத்தை அளித்த அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இந்த நாளில் மூலதனத்தை வழங்கி உதவிய கணவான்களுக்கு சான்றிதழ் அளிக்கும் விழாவில் பேசுவது குறித்து மகிழ்கிறேன்.

மதுரை ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி மேலும் பல்வேறு சிறப்புகளுடன் செயல்பட்டு சிறந்த வங்கியாக செயல்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

அதற்கு முன்னோட்டமாக இந்த வங்கிக்கு நெட் பேங்கிங் வசதி கண்டிப்பாக வேண்டும். எங்களது சேம்பரில் உள்ள உறுப்பினர்கள் பலரையும் இதில் இணைத்து வங்கியின் செயல்பாட்டினை இன்னும் மெருகூட்ட முயற்சிகளை மேற்கொள்வோம்.

அதுமட்டுமல்ல, வங்கியில் இவ்வசதி வந்தவுடன் சேம்பர் உறுப்பினர்களால் அவர்களது நடப்புக் கணக்கு மற்றும் தனி நபர் கணக்குகளை துவக்கி நம் சமூக வங்கியில் பல்வேறு பரிவர்த்தனைகளை மேற்கொள்ள நமது சேம்பர் ஊக்கப்படுத்தும். இவ்வங்கிக்கு டெபாசிட்-ஐ உயர்த்துவதற்கு எங்கள் சேம்பர் உறுதுணையாக நிற்கும் என்பதை இத்தருணத்தில் கூறிக்கொள்வதுடன் எங்களது சேம்பர் அதற்கு தகுந்த ஒத்துழைப்பு தரும் என்பதை இத்தருணத்தில் கூறிக்கொள்கிறேன் என்று கூறினார்.

அதோடு, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சருக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அவர் கூறியதாவது;

பல இக்கட்டான சூழ்நிலைகளிலிருந்து எங்கள் சமூக வங்கிக்கு புத்துயிரூட்டும் தாங்கள் தமிழக அரசிடமிருந்து வளர்ச்சி நிதிகளையும் மானியங்களையும் வழங்கி புத்துணர்ச்சி ஊட்டி வருகிறீர்கள்.

அந்த வகையில், தமிழக அரசில் இருந்து வரும் நிதிகளை எமது வங்கியின் மூலமாக பரிவர்த்தனைகளை செய்து வங்கியின் வளர்ச்சியை மேம்படுத்த ஆவண செய்ய வேண்டும் என்று எமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக இந்த பொன்னான தருணத்தில் வேண்டுகோள் விடுக்கின்றோம். என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.






சேம்பர் முன்னாள் தலைவர் திரு. K.K.G. பிரபாகரன் அவர்கள் மூன்று ஆலோசனைகளை மேடையில் அறிவித்தார். அதன் விபரங்களை மனுவாக மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்களிம் வழங்கினார். அதில், நம் ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி Red Zone-ல் இருந்து Orange Zone-க்காக முன்னேறியுள்ளது. இது Green Zone பசுமை கட்டத்திற்கு நகர்த்த சில யோசனைகளை அமைச்சர் முன் சமர்ப்பிக்கிறேன்.

**முதல் ஆலோசனை:**

- நம் ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கியில் Net Banking Facility-ஐ உடனடியாக பெறப்பட வேண்டும். இது தான் நம் வங்கி தலைவர் திரு. சாரதிக்கு வைக்கப்பட்ட முதல் கோரிக்கை. இது நாள் வரை பூர்த்தியாகவில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் தலையிட்டு உதவ வேண்டுகிறோம். பொதுவாக வணிகப்பெருமக்கள் அனைவரும் பணப் பரிவர்த்தனைகளை அலுலவலத்தில் இருந்தே செய்ய பழகிக்கொண்டோம். இப்பொழுது கொரோனா காரணமாக மிக மிக அத்தியாவசிய தேவை தவிர வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம். பொது இடமான வங்கிகளுக்கு செல்லக்கூடாது. ஆதலால் கட்டாயம் இதை உடனே கொணரப்பட வேண்டும்.
- டெபிட் கார்டு எல்லா கணக்கு வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அப்பொழுது தான் கணக்கு வைத்திருப்பவர்கள் வங்கிக்கு வர வேண்டிய அவசியம் இல்லாமல் போகும். நம் வங்கி செயல்பாடுகள், லாபத்தை கொணர பல நடைமுறை மாற்றங்கள் தேவை.

அதற்கு **இரண்டாவது ஆலோசனை:**

- மேற்கூறிய முதல் ஆலோசனையை நாம் ஏற்படுத்திக்கொடுத்தால் நிச்சயமாக அதிக அளவில் நடப்புக் கணக்குகள் நம் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அங்கத்தினர்கள் தொடங்குவார்கள்.
- அதே போல் சேமிப்புக்கணக்குகள் ஆயிரக்கணக்கில் தொடங்க நம் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் முன் நின்று வழி வகை செய்யும் என்பதை தங்கள் முன் சமர்ப்பிக்க கடமைப்பட்டுள்ளேன. நிச்சயமாக CRR போன்ற பல Norms-கள் சரி செய்ய உதவும், Housing Loan, SME Loan, Gold Loan மூலம் வியாபார அபிவிருத்தி பெற்று நம் ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி ஒரு Schedule Bank அளவுக்கு உயரும்.

**மூன்றாவது ஆலோசனை:**

சேமிப்பு கணக்குகள் அதிக அளவில் தொடங்க பலவித யோசனைகளை இதற்கு முன் நடந்த கூட்டததில் தெரிவித்து உள்ளேன். இந்த யோசனை நல்ல பலனை தரும் என்று நம்புகிறேன்.

**அதேபோல, வங்கி நிர்வாகக்குழு அல்லது நிர்வாக நடைமுறை ஆலோசனை குழுவில் குறைந்தது 3 இயக்குநர்களை சேம்பர் சார்பில் ஸௌராஷ்ட்ர வங்கி நியமிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

நம் சமூக மக்களில் 70 % பேர் BPL, (Below Poverty Line)-யில் உள்ளனர். 25% பேர் அலுவலக வேலை பார்த்து காலத்தை ஓட்டுபவர்கள். ஆனால் எல்லோரும் தினக்கூலிகள். 5% பேர் மட்டும் தான் சமுதாயத்தில் நிலையான வருமானம் உள்ளவர்கள். இந்த BPL மக்களுக்கு Mediclaim, Accident Policy கொணரப்பட வேண்டும். இதற்காக Nationalised Banks like Oriental Bank of Commerce ஒரு திட்டம் 15 வருடங்களுக்கு முன் கொண்டு வந்தது. யார் சேமிப்பு கணக்கில், ரூபாய் பத்தாயிரம் வைப்பு நிதி வைத்துள்ளார்களோ அவர்களுக்கு குறைந்த செலவில் Mediclaim பாலிசி கொடுக்கப்பட்டது. இந்த மாதிரியாக ஏதேனும் ஒரு வகையில் மக்களுக்கு உதவ திட்டமிட்டால், நிச்சயமாக நம் மக்களின் சேமிப்பு கணக்கு எண்ணிக்கை கூடும்.

ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி Green Zone வரத் தேவையான பல நல்ல ஆலோசனைகளை நம் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் தரத்தயார். இணைந்து செயல்படுவோம். நமது சேம்பர் அலுவலகம் தொடர்ந்து சொந்த கட்டிடத்தில் இயங்க இடத்தை தேர்வு செய்ய உள்ளோம். அதற்கு, நாமே நம் ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கியில் கடன் பெறத் தயாராவோம்.


சிறந்த தையல் !
குறைந்த விலையில் !
நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!
# ரேவதீஸ் டெக்ஸ்
பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்
1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223




# MARKETING IDEA

Michael Jordan was born in 1963, in the slums of Brooklyn, New York.He had four siblings and his father's earnings were not sufficient to provide for the whole family.He grew up in a poor neighbourhood. Exposed to mindless violence and heavy discrimination in the slums, he saw for himself only a hopeless future. His father saw in Michael, a lost soul and decided to do something.

He gave Michael, who was 13 years old, a piece of used clothing and asked:

"What do you think the value of this outfit would be?"

Jordan replied,"Maybe one dollar.

"His father asked, "Can you sell it for two dollars? If you can sell it, it would mean that you are a big help to your family."

Jordan nodded his head, "I'll try, but no guarantee that I'll be successful."

Jordan carefully washed the cloth clean. Because they didn't have an iron, to smoothen the cloth, he levelled it with a clothes brush on a flat board, then kept it in the sun to dry. The next day, he brought the clothes to a crowded underground station. After offering it for more than six hours. Jordan finally managed to sell it for $2. He took the two dollar bill and ran home. After that, everyday he looked for used clothing, washed and ironed it, and sold it in the crowd.

More than ten days later, his father again gave him a piece of used clothing,

"Can you think of a way you can sell this for 20 bucks?"

Aghast, Jordan said, "How is it possible? This outfit can only fetch two dollars at the most.

"His father replied, "Why don't you try it first? There might be a way.

"After breaking his head for a few hours, finally, Jordan got an idea. He asked for cousin's help to paint a picture of Donald Duck and Mickey Mouse on the garment. Then he tried to sell it in the school where the children of the rich study. Soon a housekeeper, who was there to pick his master, bought that outfit for his master. The master was a little boy of only 10 years. He loved it so much and he gave a five dollar tip. 25 dollars was a huge amount for Jordan, the equivalent of a month's salary of his father.

When he got home, his father gave him yet another piece of used clothing,

"Are you able to resell it at a price of 200 dollars?"

Jordan's eyes lit up.This time, Jordan accepted the clothes without the slightest doubt.

Two months later a popular movie actress from the movie "Charlie's Angels", Farah Fawcett came to New York for her Movie promos. After the press conference, Jordan made his way through the security forces to reach the side of Farah Fawcett and requested her autograph on the piece of clothing. When Fawcett saw this innocent child asking for her autograph, she gladly signed it.

Jordan was shouting very excitedly, "This is a jersey signed by Miss Farah Fawcett, the selling price is 200 dollars!" He auctioned off the clothes, to a businessman for a price of 1,200 dollars!

Upon returning home, his father broke into TEARS and said, "I am amazed that you did it My child! You're really great!

"That night, Jordan slept alongside his father.

His father said, "Son, in your experience selling these three pieces of clothing, what did you learn about success?"

Jordan replied, "Where there's a will, there's a way.

"His father nodded his head, then shook his head,

"What you say is not entirely wrong! But that was not my intention. I just wanted to show you that a piece of used clothing which is worth only a dollar can also be increased in value, Then how about us - living & thinking humans? We may be darker and poorer, but what if we CAN increase our VALUE.

"This thought enlightened young Jordan. Even a piece of used clothing could be made dignified, then why not me? There is absolutely no reason to underestimate myself. From then on, Michael Jordan felt that his future would be beautiful and full of hope.

He went on to become the greatest basketball player of all times.How can I increase my own value? I am finding it a very interesting thought. I am sure, you too, will. - M.K. Ganesh Babu

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

**Cell: 90805 54802, 99424 90217**

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com


அனைவரும் பயன்படுத்தக்கூடிய கதவின் கைப்பிடி, தொலைபேசி போன்ற பொருட்களை கிருமி நாசினி கொண்டு அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.

## தொழிலாளர் சட்டங்களைப் பற்றிய பயங்களைப் போக்கும் மத்திய தொழிலாளர் அமைச்சகம்

- pib.gov.in /PressReleasePage - Dtd. 28.09.2020

நாடாளுமன்றத்தால் சமீபத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட தொழிலாளர் சட்டங்கள் மூலம் கொண்டுவரப்பட்டுள்ள வரலாற்று சிறப்புமிக்க சீர்திருத்தங்களைப் பற்றிய பயங்களையும், சந்தேகங்களையும் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் போக்கியுள்ளது.

இவற்றைப் பற்றிய விமர்சனங்கள் ஆதாரமற்றதென்றும், தேவையற்றதென்றும் அமைச்சகம் கூறியது. பணியாட்கள் நீக்கம் மற்றும் நிறுவனத்தை மூடுவதற்காக முன்கூட்டியே அனுமதி வாங்குவதற்கான பணியாளர்கள் எண்ணிக்கையை 300-ஆக உயர்த்தியிருப்பதை குறித்து விளக்கமளித்துள்ள அமைச்சகம், இது குறித்த பரிந்துரையை நாடாளுமன்ற நிலைக்குழுவும் செய்துள்ளதாக தெரிவித்துள்ளது.

**அரசிடம் இருந்து பெற வேண்டிய முன் அனுமதி மட்டும் தான் நீக்கப்பட்டுளளதே தவிர, இதர பலன்கள் மற்றும் பணியாளர்களின் உரிமைகள் அப்படியே தான் உள்ளன என தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் கூறியுள்ளது.**

**பணி நீக்கத்துக்கு முன்னதாக நோட்டீஸ், பணி நிறைவு செய்த ஒவ்வொரு வருடத்துக்கும் 15 நாட்களுக்கான ஊதியம், நோட்டீஸ் காலத்துக்கான ஊதியம் போன்ற உரிமைகளில் எந்த மாற்றமும் இல்லை என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

மேலும், மறுதிறன் வளர்த்தல் நிதியின் கீழ் கூடுதலாக 15 நாட்கள் ஊதியத்துக்கு நிகரான பணப் பலனை தொழிற்சாலை உறவுகள் குறியீடு வலியுறுத்துவதாக அமைச்சகம் கூறியுள்ளது.

## EPFO-ன் வாட்ஸ்ஆப் உதவி

### பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

- pib.gov.in/PressReleasePage - Dtd. 13.10.2020

உறுப்பினர்களின் அனுபவத்தை மேலும் எளிதாக மேம்படுத்தும் வகையில், EPFO வாட்ஸ் ஆப் அடிப்படையிலான உதவி மற்றும் குறைதீர்வு முறையை அண்மையில் தொடங்கியது. தொழிலாளர் வருங்கால சேமநல வைப்புநிதி நிறுவனம் தொடங்கியுள்ள வாட்ஸ்ஆப் வாயிலான புதிய குறைதீர்க்கும், தீர்வு காணும் முறை உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுவரை EPFO நிறுவனமானது 1,64,040 குறைகளை மற்றும் விசாரணைகளை வாட்ஸ்ஆப் வழியே பெற்று தீர்வு கண்டுள்ளது. வாட்ஸ்ஆப் உதவி எண்கள் தொடங்கப்பட்டதில் இருந்து EPFiGMS (EPFO இணையதள குறைதீர்க்கும் தளம்) வழியில் பெறப்படும் 16% புகார்களும் முகநூல் / டிவிட்டர் போன்ற சமூக வலைதளங்கள் வழியே பதிவு செய்யப்படும். புகார்களில் 30%மும் குறைந்துள்ளன.

இணையதள அடிப்படையிலான EPFiGMS தளம், சிபிகிராம்ஸ், சமூக வலைதள பக்கங்கள் (முகநூல் & டிவிட்டர்) மற்றும் அர்பணிப்புடன் கூடிய 24×7 உதவி மையம் என பல்வேறு வடிவிலான EPFO குறைதீர்க்கும் வசதிகளுடன் கூடுதலாக இந்த சேவை வழங்கப்படுகிறது. இந்தியாவின் தகவல் தொடர்பில் வாட்ஸ் ஆப் பெரிய தளமாக வளர்ந்து வளர்வதால், தம்முடைய பங்குதாரர்கள் மற்றும் சந்தாரர்களுக்கு நேரடியாக தகவல்கள் மற்றும் தொடர்பை அளிக்கும் வகையில் வாட்ஸ் ஆப்-ஐ EPF நிறுவனம் அசாதாரணமான வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டுள்ளது.

வழிகாட்டும் கொள்கைகளை கடைபிடிக்க தனிப்பட்ட முறையில் EPF மண்டல அலுவலகங்களுடன் நேருக்கு நேர் PF சந்தாதாரர்கள் உரையாடுவதற்கு இந்த முயற்சி வழி வகுக்கிறது.

For Further Details Contact: - L.V. Jothi Prakash, Advocate / Labour Mngt. Consultant, Madurai. Cell: 98422 64144



PG INDIA




PG India

Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in


P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI

SRIS TEXTURE
ONLY TEXTURE SINCE 2009

Cell: 97891 08600
SRIS INTERIOR
* INTERIOR * WALL TEXTURE
* CONSTRUCTION CHEMICAL
No: 72, Devangar High School Road,
Coimbatore - 641 002
ID: srisinterior@rediffmail.com



# 29 தொழிலாளர் சட்டங்கள் 4 சட்டத்தொகுப்புகளாக (Codes) மாற்றம்

சமீபத்தில் மத்திய அரசு தற்சமயம் நடைமுறையில் இருந்து வரும் 29 தொழிலாளர் சட்டங்களை ஒருங்கிணைத்து நான்கு சட்டத்தொகுப்புகளாக(Code) கீழ்க்கண்டவாறு உருவாக்கியுள்ளது. அந்த நான்கு சட்டத் தொகுப்புகளும் (Codes) நடைமுறைக்கு வருவதைப்பற்றி மத்திய அரசால் அறிவிக்கப்படும்.

| வ.எண். | புதிய சட்டத் தொகுப்பு | வ.எண். | தற்சமயம் நடைமுறையில் இருந்து வரும் தொழிலாளர் சட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | 2019-ஆம் ஆண்டு ஊதிய சட்டத்தொகுப்பு (The Code on Wages, 2019) | 1. | 1936-ம் ஆண்டு சம்பள பட்டுவடா சட்டம் |
| | | 2. | 1948-ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டம் |
| | | 3. | 1965-ம் ஆண்டு மிகையூதிய பட்டுவடா சட்டம் |
| | | 4. | 1976-ம் ஆண்டு சம ஊதிய சட்டம் |
| 2. | 2020-ஆம் ஆண்டு தொழிலியல் உறவு சட்டத்தொகுப்பு (The Industrial Relations Code, 2020) | 1. | 1926-ம் ஆண்டு தொழிற் சங்கங்கள் சட்டம் |
| | | 2. | 1946-ம் ஆண்டு தொழிற் கூடங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கான (நிலை ஆணைகள்) சட்டம் |
| | | 3. | 1947-ம் ஆண்டு தொழிலகத் தகராறுகள் சட்டம் |
| 3. | 2020-ஆம் ஆண்டு சமுதாயக் காப்புறுதி சட்டத்தொகுப்பு (The Code on Social Security, 2020) | 1. | 1923-ம் ஆண்டு பணியாள் இழப்பீடு சட்டம் |
| | | 2. | 1948-ம் ஆண்டு தொழிலாளர் காப்புறுதிச் சட்டம் |
| | | 3. | 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நதிச் சட்டம் |
| | | 4. | 1959-ம் ஆண்டு வேலைவாய்ப்பகம் (காலியிடங்கள் கட்டாய அறிக்கை) சட்டம் |
| | | 5. | 1961-ம் ஆண்டு மகப்பேறு சலுகை சட்டம் |
| | | 6. | 1972-ம் ஆண்டு பணிக்கொடை பட்டுவடா சட்டம் |
| | | 7. | 1981-ம் ஆண்டு திரைப்பட தொழிலாளர்கள் சேமநல நிதி சட்டம் |
| | | 8. | 1996-ம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமான தொழிலாளர்கள் சேமநல மேல்வரி சட்டம் |
| | | 9. | 2008-ம் ஆண்டு அமைப்புசாரா தொழிலாளர்கள் சமுதாய காப்புறுதி சட்டம் |
| 4. | 2020-ஆம் ஆண்டு வாழ்தொழில் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் பணி நிலைமைகளின் சட்டத் தொகுப்பு. (The Occupational Safety, Health and Working Conditions Code, 2020) | 1. | 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் |
| | | 2. | 1951-ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் |
| | | 3. | 1952-ம் ஆண்டு சுரங்கச் சட்டம் |
| | | 4. | 1955-ம் ஆண்டு பணிபுரியும் பத்திரிக்கையாளர்கள் & செய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) & பல்வகை ஷரத்துக்கள் சட்டம் |
| | | 5. | 1958-ம் ஆண்டு பணிபுரியும் பத்திரிக்கையாளர்கள் (சம்பள விகித நிர்ணய) சட்டம் |
| | | 6. | 1961-ம் ஆண்டு மோட்டார் வாகன போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம் |
| | | 7. | 1966-ம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள்(பணி நிலைமைகள்)சட்டம் |
| | | 8. | 1970-ம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் (முறை படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் |
| | | 9. | 1976-ம் ஆண்டு விற்பனை அபிவிருத்தி பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் |
| | | 10. | 1979-ம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்துதலும், பணி நிலைமைகளும்) சட்டம் |
| | | 11. | 1981-ம் ஆண்டு திரைப்பட தொழிலாளர்கள் மற்றும் திரையரங்கு தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைபடுத்துதல்) சட்டம் |
| | | 12. | 1986-ம் ஆண்டு கப்பல் தள தொழிலாளர்கள் (பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் சேமநல) சட்டம் |
| | | 13. | 1996-ம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமான தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்துதலும், பணி நிலைமைகளும்) சட்டம். |


For Further Details Contact:
- L.V. Jothi Prakash
Advocate / Labour Mngt. Consultant,
Madurai.
**Cell: 98422 64144**





Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633


காய்ச்சல், இருமல், சளி, வறண்ட தொண்டை இருநாட்களுக்கு மேல் இருந்தால் கண்டிப்பாக மருத்துவரை அணுகவும்.



https://youtu.be/-JMVniVMLr0

# பொருட்களின் விற்பனைக்கு டி.சி.எஸ். (TCS)

**1. TCS என்றால் என்ன? TDS மற்றும் TCS இடையே உள்ள வேறுபாடு என்ன?**

TCS என்பதின் விரிவாக்கம் Tax Collected at Source அதாவது மூலத்தில் சேகரிக்கப்பட்ட வரி ஆகும். ஒரு விற்பனையாளர் பொருளை விற்கும் பொழுது அதன் விலையுடன் சேர்த்து வரியையும் வசூலிக்க வேண்டும். வருமான வரிச் சட்டத்தின் பரிவு 206 C(1H)ன் படி விற்பனையாளர் வாங்குபவர்களிடமிருந்து வரி வசூலிக்க வேண்டும்.

பொதுவாக TDS மற்றும் TCS ஆனது ஒருவரின் வருமானம் உருவாகும் போதே வசூலிக்கப்படும் வரிகள் ஆகும்.

TDS என்பது ஒரு நிறுவனம் ஒரு தனி நபருக்கு செலுத்திய கட்டணத்தில், ஒரு குறிப்பிட்ட வரம்பை மீறினால் கழிக்கப்படும் வரி ஆகும். TCS என்பது வாங்குபவர்களுக்கு பொருளை விற்கும்போது விற்பனையாளர்களால் வசூலிக்கப்படும் வரி ஆகும்.

TDS என்பது ஒரு நிறுவனமோ அல்லது ஒரு தனி நபரோ மற்றவருக்கு வியாபாரத்தின் பொருட்டு ஒரு தொகை செலுத்தும் பொழுது தொகையிலிருந்து ஒரு குறிப்பிட்ட வரியை பிடித்துக்கொள்வார். ஆனால் TCS என்பத ஒரு பொருளை வாங்கும் பொழுது அதன் விற்பனையாளர் விற்பனை விலையுடன் சேர்த்து வரியையும் வசூலிப்பார்.

இவ்வாறு வசூலிக்கப்பட்ட வரி அரசாங்கத்திற்கு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

**2. அரசு அறிமுகப்படுத்தியுள்ள TCS குறித்த விபரங்கள் என்னென்ன?**

2020 அக்டோபர் 1 முதல் அரசாங்கமானது TCS என்ற ஒரு புதிய வரிமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு விற்பனையாளர் தன்னுடைய பொருளை மற்றவர்க்கு விற்கும் பொழுது விலையுடன் சேர்த்து வரியையும் வசூலிக்கப்பட்ட வேண்டும். அவ்வாறு வசூலிக்கப்படும் வரி அரசிடம் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செலுத்தப்பட வேண்டும். அதன் முக்கிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. வியாபாரம் செய்யும் ஒரு நபர் முந்தைய நிதி ஆண்டில் அதாவது 31.3.2020 முடிவடைந்த ஆண்டில், பத்து கோடி ரூபாய்க்கு மேலாக விற்பனை செய்திருந்தால் அவர் நடப்பு ஆண்டில் விற்கப்படும் பொருளின் விலையுடன் சேர்த்து வரியையும் வசூலிக்க வேண்டும்.

2. மேற்கூறிய வரிமுறை அனைத்து விற்பனைக்கும் பொருந்தாது. எவரொருவர் ஒரு வாடிக்கையாளருக்கு நடப்பு ஆண்டில் ரூ. 50 லட்சத்திற்கும் மேலாக விற்பனை செய்துள்ளாரரோ அத்தகைய வாடிக்கையாளருக்கு மட்டுமே TCS எனும் வரியை வசூலிக்க வேண்டும். மற்ற வாடிக்கையாளர்களுக்கு TCS வரி வசூலிக்கத் தேவையில்லை. அதேபோல் 30.09.2020க்கு முன்னர் வாங்கிய தொகைக்கு வரி வசூலிக்கத் தேவையில்லை.

3. உதாரணமாக ஒரு வாடிக்கையாளருக்கு நடப்பு நிதி ஆண்டில் 60 லட்ச ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளார் என்றால் அவருக்கு 10 லட்ச ரூபாய்க்கு மட்டுமே TCS வரி வசூல் செய்ய வேண்டும் ஏனென்றால் சட்டத்தின்படி 50 லட்ச ரூபாய்க்கு மேலாக விற்பனை செய்த தொகைக்கு மட்டுமே TCS வசூல் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாருள்ள ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு நாம் பொருள் விற்பனை செய்துள்ளோம். ஒரு லட்சம் ரூபாய்க்கு 5 சதவீதம் ஜி.எஸ்.டி வரி என்று வைத்துக் கொண்டால் அவருடைய Sales Bill-ல் ரூ. 105000 காண்பிக்கப்பட்டிருக்கும். இத்தொகையில் 0.075% ஆக TCS அதாவது ரூ. 78.75 வசூலிக்கப்பட வேண்டும்.

4. மேற்கூறிய 0.075% என்பது நடப்பு நிதியாண்டில் மட்டுமே பொருந்தும். அடுத்த நிதியாண்டில் இருந்து அதாவது 01.04.2021ல் இருந்து 0.1% ஐ TCS வசூல் செய்ய வேண்டும். ஆனால் ஒரு வாடிக்கையாளருக்கு PAN நம்பர் அல்லது ஆதார் நம்பர் இல்லை எனில் அவருக்கு 1% TCS வசூல் செய்ய வேண்டும்.

5. கீழ்காணும் நபர்களுக்கு விற்பனை செய்யும் பொழுது இந்த TCS நடைமுறை பொருந்தாது.

- ஒரு வாடிக்கையாளருக்கு நடப்பு நிதி ஆண்டில் 50 லட்ச ரூபாய்க்கும் கீழாக விற்பனை செய்யும் பொழுது.
- ஒரு வாடிக்கையாளருக்கு சர்வீஸ் செய்து உதாரணமாக இன்டீரியர் டெக்கரேஷன்(லேபர் மட்டும்), கன்ஸ்ட்ரக்ஷன் (லேபர் மட்டும்), டாக்டர், ஜாப் வொர்க், போன்ற சேவைகள் செய்து அதற்கான விலையை வாங்கும் பொழுது.
- அயல் நாட்டிற்கு விற்பனை செய்யும் பொழுது அதாவது எக்ஸ்போர்ட் செய்யும் பொழுது.
- மத்திய / மாநில அரசு அயல் நாட்டு தூதரகம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் விற்பனை செய்யும் பொழுது.


Sowndarya Traders

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

- சில குறிப்பிட்ட பொருட்களை விற்பனை செய்யும் பொழுது அதாவது ஏற்கனவே அதற்கு TCS நடைமுறைச் சட்டம் பொருந்தும் பொழுது. உதாரணமாக, இரு சக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள் விற்பனை, ஆல்கஹால் விற்பனை, மரம் விற்பனை, Scrap Sales ஏனென்றால் இவைகளுக்கு ஏற்கனவே TCS நடைமுறை அமுலில் உள்ளது.

6. எப்பொழுது TCS வரி வசூல் செய்ய வேண்டும்? பொருளை விற்கும் போதா? அல்லது விற்ற பொருளின் விலையை வாங்கும்போதா? TCS சட்டத்தின்படி பொருளின் விலையை வாங்கும்போதே TCS வரியை வசூல் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே முதலில் பொருளை விற்று இன்வாய்ஸ்-ஐ விற்பனையாளர் கொடுத்துவிடுவார். அந்த பொருளுக்கான விலையானது சிறிது காலம் கழித்து கூட வசூல் செய்யப்படலாம். எனவே அப்பொழுது வரியை வசூல் செய்தால் போதுமானது என்று சட்டம் கூறுகிறது.

ஆனால் இதில் ஒரு சிக்கல் உள்ளது. சில நேரங்களில் விற்பனை செய்வதற்கு முன்னரே அட்வான்ஸ் பேமெண்ட் வாங்கப்படலாம் அத்தகைய தருணங்களில் TCS அட்வான்ஸ் வாங்கும் பொழுதே வசூல் செய்து விடவேண்டும்.

7. விற்கும் பொருளின் விலையில் மட்டும் ஜி.எஸ்.டி போட்டால் போதுமானது. அதிலிருந்து TCS-யை கூட்டி மொத்தத் தொகையில் ஜி.எஸ்.டி போடத்தேவையில்லை. இக்கருத்து ஜி.எஸ்.டி-ல் CBIC Circular No: 76/50/2018-GST இல் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. வியாபாரிகள் ஒவ்வொருவரும் தங்களுடைய கணக்காளரிடம் கீழ்க்காணுமாறு Journal Entries-யை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படகின்றனர்.

| TRANSACTION TYPE | PARTICULARS | DEBIT | CREDIT |
|---|---|---|---|
| At the time of booking sale transaction | Mr. XYZ customer a/c | 105,000.00 | |
| | Mr. XYZ TCS Collectible | 78.75 | |
| | To Sales | | 100,000.00 |
| | To GST | | 5,000.00 |
| | To TCS Charged | | 78.75 |
| | | 105,078.75 | 105,078.75 |
| Receipt of sale proceeds from customer | Bank a/c | 105,078.75 | |
| | To Mr. XYZ customer a/c | | 105,000.00 |
| | To Mr. XYZ TCS Collectible | | 78.75 |
| | | 105,078.75 | 105,078.75 |
| Provision of TCS liability on the date of receiving sale proceeds | TCS Charged | 78.75 | |
| | To TCS payable | | 78.75 |
| | | 78.75 | 78.75 |
| On payment of TCS on 07th of next month | TCS payable | 78.75 | |
| | To Bank a/c | | 78.75 |
| | | 78.75 | 78.75 |

- BSLS and Associates, Chartered Accountants

# 7pm

## time to put your PLATE DOWN

it's well known that eating late in the night affects a person's metabolism, but now a study has found that it impacts overnight blood pressure & raises risk of heart attack, setting the **dinner deadline** at **7pm**. The research, which examined more than 700 people, warns against late-night dining and points out the possible implications.

## WHY YOU SHOULD EAT EARLY

- Eating late night puts people at danger of heart attacks & strokes, warn experts
- Adults should ideally **eat nothing after 7pm**
- Early dinner gives the body time to wind down & rest
- Dinner within 2 hours of going to bed keeps the body on 'high alert' & blood pressure doesn't fall properly overnight
- In a healthy person, blood pressure drops by at least 10% when they go to sleep
- Eating late can do more damage to the heart then having a diet high in salt.

-Timesofindia.com


18 ஆம் ஆண்டு சேவை
பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337

K.D. பத்மினி
(A to Z Arrangements) அவ்த்த லவி பூல் தேரியோ ⁕ வரவேற்பு அமைப்பாளர்
சத்குரு ஸரணம் சரணம்
98946 71401 99426 71819
63819 26819 90255 17366
பத்மினி ஈவன்ட்ஸ்
★ திருமணம் ★ நலுங்கு ★ நிச்சயதார்த்தம் ★ வளைகாப்பு ★ பிறந்த நாள் ★ பலூன் ★ ஷஷ்டியப்த பூர்த்தி ★ புதுமனை புகுவிழா மற்றும் சுப வைபவங்களுக்கு
★ புஷ்பம் ★ மேடை அலங்காரம் ★ கிப்ட் பேக்கிங் ★ கேட்டரிங் மற்றும் ★ பத்திரிக்கை அச்சடித்தல் ★ ஹனிமூன் & டூர் பேக்கேஜ் (உள்நாடு, வெளிநாடு)
மேற்கண்ட வேலைகள் அனைத்தும் சிறப்பாக அமைத்து தரப்படும்.
5-A, பழைய இங்கிலீஷ் கிளப் சந்து, காமராஜர் சாலை, மதுரை-9.

# 42வது ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தின் பரிந்துரைகள்

ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டம் கீழ்கண்ட பரிந்துரைகளை வழங்கயுள்ளது;

- செஸ் வரி இழப்பீடானது மாற்றத்துக்கான ஐந்து ஆண்டுகாலத்துக்கும் அப்பாலும் அதாவது 2022-ம் ஆண்டு ஜுன் மாதத்துக்கு அப்பாலும் நீடிக்கப்படும். வருவாய் இடைவெளியை சரி செய்வதற்கு இந்த காலகட்டம் தேவைப்படலாம். இது குறித்த பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- 2020-21ம் ஆண்டில் ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடுகட்ட மாநிலங்களுக்கு 20,000 கோடி ரூபாயை இழப்பீடாக மத்திய அரசு விடுவிக்கிறது. 2017-18ம் ஆண்டுக்கான ஐ.ஜி.எஸ்.டி. 25000 கோடி ரூபாய் தொகை அடுத்த வாரம் விடுவிக்கப்படும்.

- **ரிட்டர்ன் தாக்கல் செய்வதற்கான அம்சங்களில் விரிவாக்கம்;** தற்போது நடைமுறையில் உள்ள **ஜி.எஸ்.டி.ஆர் 1/3பி திட்டத்தில் புதிய ரிட்டர்ன் முறையாக சில கூடுதல் அம்சங்களை இணைப்பதற்கான அனுகுமுறை**களை கடந்த 2020 மார்ச் மாதம் நடந்த 39வது கூட்டத்தில் கவுன்சில் பரிந்துரைத்தது. அப்போதில் இருந்து பல்வேறு வரிவாக்கப்பட்ட அம்சங்கள் ஜி.எஸ்.டி பொது இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வணிகம் செய்வதை எளிதாக்க மற்றும் இணக்கமான அனுபவத்தை மேம்படுத்தவும் மேலும் விரிவாக்கும் நோக்கத்துடன், ஜி.எஸ்.டி-யின் கீழ் ரிட்டர்ன் தாக்கல் செய்வதற்கான எதிர்காலத்துக்கான வழியை கவுன்சில் அங்கீகரிக்கிறது. ரிட்டர்ன் தாக்கல் செய்வதை எளிமைப்படுத்துவதும் வரி செத்துவோருக்கு இணக்கமான அவர்களின் சுமைகளை கணிசமாக குறைப்பதும் தான் அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்பின் நோக்கமாகும். **வெளியில் விற்பனை செய்யப்பட்ட (ஜி.எஸ்.டி.ஆர்-1) பொருட்களின் விவரங்களை வரி செலுத்துவோர் தகுந்த நேரத்தில் தாக்கல் செய்வதன் மூலம், அவரது விநியோகஸ்தர்கள் (1)உள்ளூர் விநியோகங்கள், இறக்குமதிகள் மற்றும் மீள் கட்டணங்களுக்கு செலுத்தப்பட்ட தொகை உள்ளிட்ட தங்களது அனைத்து ஆதாரங்களில் இருந்தும், தமது மின்னனு பற்று பேரேட்டில் இருக்கும் ஐடிசியை பார்க்க அனுமதிப்பார். வரி செலுத்துவதற்கான காலக்கெடுவுக்கு முன்னர் மற்றும் (2) தமது அனைத்து விநியோகஸ்தர்கள் மற்றும் வரி செலுத்துவோர் நிரப்பிய தகவல்கள் வழியே (ஜி.எஸ்.டி.ஆர்-3பி) தாமாக ரிட்டர்ன் பதிவு செய்யும் முறையை செயலாக்குதல். இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், உரிய நேரத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஜி.எஸ்.டி.ஆர்-1 அறிக்கை மட்டுமே ஜி.எஸ்.டி.ஆர்-3பி படிவத்தில் ரிட்டர்ன் தாக்கல்செய்ய போதுமானதாக இருக்கும். அப்போது தான் பொதுவான இணையதளத்தில் அது தானாக தயாராகும்.**

-pib.gov.in/PressRelease

## இரங்கல்



K.R. சுப்பிரமணியன்
மறைவு: 17.09.2020

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் அங்கத்தினரும், ரோஜா கிராஃபிக்ஸ் உரிமையாளருமான திரு. திரு. **K.R.** சுப்பிரமணியன், அவர்கள் இறைவனடி சேர்ந்தனர் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவரை இழந்து தவிக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது. அதோடு, ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

## மருத்துவத் தகவல்

**கேள்வி:** என் வயது 42, கடந்த வாரம் காரில் செல்லும் போது நடந்த சாலை விபத்தில் எனது கார் மூன்று முறை உருண்டது. எனக்கு தோள்பட்டையில் ஒரு ஜவ்வு கிழிந்து அதை மூட்டு நுண்துளை சிகிச்சை செய்து உள்ளேன். நான் மற்றும் பின் சீட்டில் அமர்ந்திருந்த எனது உறவினர்கள் இருவரும் சீட் பெல்ட் அணிந்து இருந்தோம். ஓட்டுனர் மட்டும் சீட் பெல்ட் அணியவில்லை. ஓட்டுனர் கார் விபத்து நடந்த இடத்திலேயே அகால மரணம் அடைந்தார். சீட்பெல்ட் அணிந்த இருந்தால் உயிரழப்பை தவிர்த்து இருக்க முடியுமா?

**பதில்:** பொதுவாக ஒரு சாலை விபத்தில் மரணம் அடைவதற்கு காரணம், நெஞ்சிலோ அல்லது வயிற்றின் கீழ்பகுதியிலோ ஏற்படும் தீவிர காயங்கள் தான். கார் சீட்பெல்ட் அணியும்போது இந்த காயங்களை தடுக்க முடியும். இது விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,
வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக், செல்: 93442 46436


வாழ்வில் வளம் பெற! வர்த்தகத்தில் வெற்றி பெற!!
SCT
MADURAI NO.1 ENTERTAINMENT CHANNEL
24X7 LOCAL TV CHANNEL IN MADURAI
Get in on Google Play Store
Sourashtra Cable TV SCT
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
94430 34009
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD


கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுகுகளிலும் கழுவ வேண்டும்.



# அவசரம்... ஆடம்பரம்... இயல்பு... ஈதி...

– B.S. ஜெனார்த்தனன்

ஒரு காலத்தில் திருமணம் மற்ற விசேஷங்களுக்கு சென்றால் விருந்தில் தண்ணீர் குடிப்பதற்கு எவர்சில்வர் அல்லது அலுமினிய டம்ளர் தான் பயன்படுத்தி வந்தார்கள். தண்ணீரை வீணாக்காமல் குடித்துவிட்டு அதே டம்ளரில் மேலும் தண்ணீரை வாங்கி குடித்த காலம். அப்போதெல்லாம் தண்ணீர் வீணாவது கிடையாது. ஒருவருக்கு ஒரு டம்ளர் வைத்தால் ஆச்சர்யப்படும் நிலை. திருமணம் முடிந்து மண்டபத்தை காலி செய்யும் போது எண்ணிக்கையில் குறைந்த டம்ளருக்கு வைப்புத் தொகையிலிருந்து கழித்துப் பெறப்பட்ட காலம். ஒரு நல்ல டம்ளரின் விலை அதிகபட்சமாக ரூ. 20 லிருந்த காலம். ஒரு டம்ளர் வாங்கினால் பல ஆண்டுகள் பயன்படுத்தலாம். இன்றும் ரூ. 20க்கு நல்ல டம்ளர் கிடைக்கிறது.

காலம் மாற மாற சுத்தம், சுகாதாரம் என்ற அடிப்படையில் மாறத் தொடங்கிய நமது பழக்கவழக்கங்கள் நாகரீக உலகில் வாசம் செய்யத் தொடங்கியது. இதில் தவறு ஒன்றுமில்லை. தேவையான மாற்றம் நிச்சயம் வேண்டும். ஆனால் அந்த மாற்றம் நமது சுத்தம், சுகாதாரம் ஆகியவை மட்டும் கருத்தில் கொண்டு உள்ளதே தவிர ஆரோக்கியத்திற்கு வழிவகை செய்துள்ளதா என்று சிந்தித்துப் பார்க்க மறந்துவிட்டோமா என்று தோன்றுகிறது.

ஆம்! அவசர பயன்பாட்டிற்காக தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கப், பேப்பர் கப் எனப்படும் டிஸ்போசபில் கப் காலம் செல்ல செல்ல ஆடம்பரமாகி இன்று இயல்பாக புழக்கத்தில் வந்து நம்மையும் நம் நிலத்தையும் ஈதியாக்கி வருகிறது. சில்வர், அலுமினியம் மற்றும் பிளாஸ்டிக் டம்ளர் அப்போது தான் புதிதாக கழுவி வந்தாலும் அந்த டம்ளர் சுத்தமாக உள்ளதா என்று ஒரு முறைக்கு பல முறை டம்ளரை திருப்பி திருப்பியும், உள்ளேயும், வெளியேயும் பார்க்கும் பழக்கமுள்ள மக்கள் பிளாஸ்டிக் மற்றும் பேப்பர் கப் போன்றவற்றை எதுவும் பார்க்காமல் அதனைப் பயன்படுத்துகின்றனர்.

**மனிதனால் சுத்தம் செய்யப்பட்ட டம்ளரில் இல்லாத நம்பிக்கை இயந்திரத்தால் உற்பத்தியான புதிய கப் சுத்தமானது என்ற நம்பிக்கை நம்மில் அனைவருக்கும் இருப்பது தான் ஆச்சர்யம்.**

சாப்பாட்டு இலையை முதலில் நன்றாக கழுவி பந்தியில் பரிமாறப் போட்டிருந்தாலும் முதலில் அதனை சுத்தம் செய்ய தண்ணீரைத் தெளிப்பது வழக்கம். இயற்கை நம் நலனுக்காக கொடுத்த இலையில் சாப்பிடும் முன்பு சுத்தம் செய்து தான் பரிமாறப்படுகிறது.

ஆனால், பிளாஸ்டிக் மற்றும் பேப்பர் கப் எவ்வகை இயந்திரத்தில் சுத்தமாகி எவ்வாறு பயன்படுத்த வந்தன என்பது நாம் சிந்திப்பதில்லை. இயற்கையாக விளையும் இலையை நாம் சுத்தம் செய்து கொள்ளும் நாம் இயந்திரத்தினால் உற்பத்தியானவற்றை சுத்தம் செய்ய நினைப்பதில்லை. பேப்பர் கப், பிளாஸ்டிக் கப் எந்த வகையில் உற்பத்தியாகிறது என்று சற்றும் சந்திக்கவிடாமல் செய்தது எவை? இது போன்ற பழக்கத்திற்கு மாறியதால் நமக்கும் இந்த உலகத்திற்கு என்ன நன்மை தீமை என்று எப்போதாவது சிந்தித்திருப்போமா? நாம் மாற நினைத்தாலும் இன்றைய சூழ்நிலை நம்மை மாற விடுவதில்லை.... மற்றவர்களையும் மாற்ற விடுவதில்லை... காரணம் ஊரோடு ஒத்துவாழ்... என்ற தத்துவம் தான். ஒரு பேப்பர் சிறிது நேரம் தண்ணீரில் நனைந்தாலே அதன் நிலை மாறும் என்று நம் அனைவருக்கும் தெரியும். ஆனால் சூடான காபி, தேநீர், பால் போன்றவற்றை ஊற்றி சில மணி நேரம் கூட அந்த பேப்பர் கப் ஒன்றும் ஆவதில்லையே ஏன்... என்று சிந்தித்திருப்போமா?....

அப்படி அந்த பேப்பர் கப் சூடானவற்றை ஊற்றினாலும் ஒன்றும் ஆகாத அளவிற்கு ஏதோ ஒரு திரவியத்தைப் பயன்படுத்தித் தான் அதனை உருவாக்குகிறார்கள் என்பதைத் தெரிந்தும் அந்த திரவியத்தால் நமது உடலுக்கு என்ன வகையான மாற்றம் செய்யும் என்று நினைப்பதற்கு கூட நேரமில்லாமல் இருப்பது தான் ஆச்சர்யமான விஷயம்.

திருமண நிகழ்வில் ஆரம்பித்த இப்பழக்கம் இப்போது மெல்ல மெல்ல தேநீர் கடைகளிலும், அலுவலகத்திலும் அன்றாட பயன்பாட்டிற்கு வந்துவிட்டன இதன் பயன்பாடு. இத்தகைய பயன்பாட்டிற்கு நாம் அனைவரும் வரவேற்க காரணம் சுத்தம், சுகாதாரம் என்பது மட்டுமே. சுத்தம் சுகாதாரம் என்று சொல்லி சொல்லி நாம் விலை கொடுத்து நோய்களை வாங்கிக் கொண்டுள்ளோம் என்பது நாம் சிந்திப்பதில்லை.

எடுத்துச்செல்ல எதுவுமில்லை, கொடுத்துச் செல்வோம் நம் இரு கண்களை என்று ஒருவர் மறைந்த பின் இறந்தவரின் கண்களைத் தானமாக கொடுக்கும் குணமுள்ளவர்கள் நாம். விபத்தில் ஒருவர் மரணிக்கும் தருணத்தில் அவருடைய உடலுறுப்புகளைத் தானமாகக் கொடுத்து பிறரை வாழ வைக்கும் உயர்ந்த உள்ளம் கொண்டவர்கள் நாம். நாம் மறைந்தாலும் நம்மால் பலர் பயன்படுவார்களானால் தன் உடலைக் கூட தானமாகக் கொடுக்கும் குணம் கொண்டவர்கள் நாம். இருக்கும் வரை ஆரோக்கியத்தோடு வாழ நம்மையும் இந்த மண்ணையும் காப்பது நமது தார்மீக கடமை.

இயற்கை நமக்கு அளித்துள்ள அனைத்தும் ஏதோ ஒரு நல்ல பயன்பாட்டிற்கு கொடுத்த கொடை. தினை விதைத்தால் தினை அறுவடை செய்யலாம். வினை விதைத்தால் வினை அறுவடை செய்யலாம் என்ற வழக்கச் சொல் நம்மிடையே புழக்கத்தில் உள்ளது. தற்போது பயன்பாட்டிற்கு உள்ள பிளாஸ்டிக் மற்றும் பேப்பர் கப் நிலத்திற்கு மட்டுமல்ல நம் உடலுக்கும் கேடு தான்... வினை விதைக்கிறோம்....

சிந்திப்போம்.... செயல்படுவோம்....

கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுக்குகளிலும் கழுவ வேண்டும்.

# வங்கிக் கணக்கு இருந்தாலே ரூ. 10 லட்சம் வரை காப்பீடு!

இன்றைய சூழலில் எல்லோருக்குமே காப்பீடு என்பது அவசியமான ஒன்றாக இருக்கிறது. திடீர் மற்றும் எதிர்பாராத மருத்துவ செலவுகளை நிதி நெருக்கடி ஏற்படாமல் மேற்கொள்ள வேண்டுமெனில் நிச்சயம் காப்பீடு தேவை. காப்பீட்டின் அவசியத்தை அறிந்தவர்கள் காப்பீடு எடுத்துக்கொள்கிறார்கள். அவ்வாறு எடுத்துக்கொள்பவர்களுக்கு எதுவும் ஆகவில்லை என்றால் கட்டிய பணம் வீண் என நினைப்பவர்களுக்கு இந்தத் தகவல்.

- வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு அவர்களின் டெபிட் அல்லது கிரெடிட் கார்டு மீது ஒவ்வொரு வங்கியும் காப்பீடு வழங்குகிறது. வங்கிக் கணக்கு மூலம் பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY) மற்றும் பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY) ஆகிய இரண்டு காப்பீடு திட்டங்கள் 2015 லிருந்தே நடைமுறையில் உள்ளன. இந்தத் திட்டங்களின் மூலம் குறைந்தபட்சம் ரூ. 2 லட்சம் வரை காப்பீடு கிடைக்கும். அதிகபட்சமாக ரூ. 10 லட்சம் வரை கிடைக்கலாம்.

- பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டம் (PMJJBY) 18 முதல் 50 வயது வரை உள்ளவர்களுக்கானது. பிரிமீயம் வருடத்துக்கு ரூ. 330. பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டம் (PMSBY) 18 முதல் 70 வயது வரை உள்ளவர்களுக்கானது. பிரீமியம் வருடத்துக்கு ரூ. 12. இந்த பிரீமியம் தொகை வங்கிக் கணக்கிலிருந்தே எடுத்துக்கொள்வார்கள்.

- இயற்கையாகவோ தற்கொலை காரணமாகவோ மரணம் ஏற்பட்டால் பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டத்திலும் (PMJJBY), விபத்தால் மரணம் ஏற்பட்டால், பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டத்திலும் (PMSBY) க்ளெய்ம் கோரலாம்.

- விபத்து ஏற்படும்போது கண்பார்வை, கை, கால் ஆகியவற்றை நிரந்தரமாக இழந்தால் இந்தத் திட்டங்களில் ரூ. 2 லட்சம் வரை கிளெய்ம் கிடைக்கும். ஒரு கண், ஒரு காது, ஒரு கை போன்றவை இழக்க நேர்ந்தால் ரூ. 1 லட்சம் வரை கிளெய்ம் கிடைக்கும்.

- மேலும் இந்தத் திட்டங்களில் ரூபே கார்டுகளுக்கு ரூ. 2 லட்சம் வரை கிளெய்ம் கிடைக்கும். விசா, மாஸ்டர் கார்டு போன்றவற்றுக்கு அதற்கு ஏற்ப கிளெய்ம் தொகை மாறுபடும். பயனாளியின் வங்கிக் கணக்கின் சேமிப்பு, பணப்பரிவர்த்தனை ஆகியவற்றைப் பொறுத்தும் காப்பீட்டுத் தொகை மாறும். குறிப்பாக ஒரு நபருக்கு பல டெபிட், கிரெடிட் கார்டுகள் இருந்தாலும் ஒரே கார்டில் மட்டுமே கிளெய்ம் கிடைக்கும். அந்தக் கார்டு செயல்பாட்டில் இருப்பது அவசியம்.

- இந்தக் காப்பீட்டு திட்டங்களில் கிளெய்ம் பெற முதலில் வங்கிக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். க்ளெய்ம் பெறுவதற்கான விண்ணப்பம், அதற்கான ஆவணங்கள் ஆகியவற்றை மரணம் அல்லது விபத்து நடந்த 90 நாட்களுக்குள் வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். அவற்றை சரிபார்த்து வங்கிகள் காப்பீடு நிறுவனங்களுக்குத் தங்கள் பரிந்துரைகளை அனுப்பும். பின்னர் கிளெய்ம் தரப்படும்.

- காப்பீடு பெறுவதற்கு விபத்து எனில் காவல்துறையின் முதல் தகவல் அறிக்கை மற்றும் மருத்துவ சான்றுகளும், மரணம் எனில் இறப்பு சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்கள் அவசியம். இந்த ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட நபரின் நாமினி வங்கியை அணுக வேண்டும். வங்கிக் கணக்கில் கிடைக்கும் இந்தக் காப்பீடு வசதியைப் பற்றி வங்கியாளர்களிடம் அனைவரும கேட்டுத் தெரிந்துகொண்டால் ஆபத்துக் காலங்களில் கைகொடுக்கும்.

- தனிநபர் கடன் பெறுபவர்களுக்கும் வீட்டுக்கடன் காப்பீடு உள்ளது என்பதை கடன் பெறும்பொழுது கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும்.

Source: The Hindu (T)

Courtesy - S.S. Ramsundar



ஸ்ரீ குமரன் ஆப்டிகல்
கம்ப்யூட்டர் கண் பரிசோதனை செய்யப்படும்.
கண்களில் காண்டாக்ட் லென்ஸ் பொருத்தப்படும்.
கண் பரிசோதனை இலவசம்
Computer Eye Testing Available Here
134, பாண்டிய வேளாளர் தெரு, மதுரை - 1. செல்: 98420 69421, 99522 21781


O.V.K. பாஸ்கரன்
தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...
ரிஜென்சி டிரேடிங் கம்பெனி
5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை-625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051
அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்

V.K. ஜெயசங்கர்

நம் சமூகத்தினர் அறிந்துகொள்வதற்காக...

# கோத்ரம்

– B.S. ஜெனார்த்தனன்



கோத்ரம் என்றால் ரிஷி பரம்பரை என்பத முன்பு பார்த்தோம். அப்பேர்பட்ட ரிஷி பரம்பரையில் பிறந்தவர்கள் தான் நமது வேதத்தையும், சாஸ்திரத்தையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் கட்டிக் காக்கப்பிறந்தவர்கள். இவை நம் சமூகத்தினரின் பிறப்புரிமை. இவற்றைக் காப்பாற்றப்பட வேண்டியது நமது பொறுப்புரிமையாகும்.

இது ஒரு தனிநபரின் உரிமையல்ல சமூகத்தினரின் உரிமை, கடமை... உலகத்தைக் காக்க வேண்டுமென்றால் வேதம் காக்கப்பட வேண்டும். வேதம் காக்கப்பட வேண்டுமென்றால் வேத பரம்பரை காக்கப்பட வேண்டும். வேத பரம்பரை என்றால் ஆரிஷ பரம்பரை. ஆரிஷ பரம்பரை என்றால் நம் ப்ராமண சமூகம். நம் சமூகத்தின் பண்பாடு, கலாச்சாரம், சாஸ்திரங்களையும் காப்பாற்றப்பட வேண்டியது நமது ஒவ்வொருவரின் பிறப்புரிமை என்பதை உணர வேண்டும்.

கோத்ர பிரவரம் திருமணம் மற்றும் யாகத்தின் போது பயன்படுத்துவார்கள். நம்முடைய பரம்பரை நியாயமாக வளர்ந்து ரிஷி பரம்பரையின் தகுதி குறையாமல் இருப்பதற்கும், ரிஷி பரம்பரை வாழ்வாங்கு வாழவும், ஒரே கோத்ரத்தில் திருமணம் செய்வது கிடையாது. ஏனெனில் ஒரே கோத்ரத்தில் பிறந்தவர்கள் சகோதர, சகோதரிளாவர். எத்தனை தலைமுறைகள் ஆனாலும் ஒரே கோத்திரத்தில் பிறந்தவர்கள் என்றுமே உடன்பிறந்தவர்களே. கோத்ரம் மாறி திருணம் செய்தால் தான் கோத்ர வளர்ச்சியடையும். அப்படி கோத்ரம் மாறி திருமணம் நடக்கும் தம்பதிகளின் சந்தானங்களால் தான் வேதங்களைக் காப்பாற்றப்படும் என்பது ஐதீகம்.

யாகத்தின் போதும் கோத்ரத்தைப் பயன்படுத்துவார்கள். கோத்ர பரம்பரையில் உள்ளவர்கள் தான் யாகத்தில் கலந்து கொள்ள வேண்டும். அப்பரம்பரையில் பிறந்தவர்களுக்கு தான் யாகம் செய்வதற்கு அதிகாரம் உண்டு. அவர்கள் வழியாக தான் தேவர்களுக்கு அவில்பாகம் சென்றடையும். மற்றவர்களுக்கு அந்த அதிகாரம் கிடையாது. 64 ரிஷி பரம்பரை கொண்ட நம் சமூகம் 8 வம்சோத்பவர்களாக இருக்கிறோம். ரிஷி பரம்பரையில் ரிஷிகள் அந்த வம்சத்தில் இருப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இல்லாதவர்களும் இருக்கிறார்கள்.

ரிஷிகளின் வம்சம் மற்றும் வீட்டு அடிப்பெயரான வான் விவரங்கள்.

### அக2ஸ்திய ரிஷி

- அக2ஸ்திய – விடலவான்
- இத்4மவாஹ – பஸ°வான்

### விஸ்வாமித்ர ரிஷி

- விஸ்வாமித்ர – ஜமுடு3வான்
- ஸாலிக – சிந்தலவான்
- ஜன்ஹு° – குட்டுவான்
- மந்த3பால – ஹம்ஸ்வான்
- கா3லவ – ஸு°ந்தரவான்
- ஸு°மந்த – செலுகவான்
- கௌஸிக – ஸாலிகவான்
- வால்மீகி – ஜவாருவான்

8 வம்சத்தில் 64 ரிஷிகள் 64 வான் என்ற அடிப்பெயரோடு நம் சமூகத்தினர் உள்ளனர். இன்றைய சூழலில் பலருக்கும் தங்களுடைய கோத்ரம் என்ன என்பது தெரியாதநிலை உள்ளதை கண் கூடாகக் காண முடிகிறது.

### ஆத்ரேய ரிஷி

- ஆத்ரேய – தாரவான்
- மதங்க3 – க்4ருணுமவான்
- குபித – ஆதரவான்
- கௌமந்த – ஸு°ரடிவான்
- அருணி – ஹு°தவான்
- உதங்க3 – திலகவான்
- மேதா4திதி2 – காந்தவான்

### மரீசி ரிஷி

- மரீசி – கு3ஜு°லுவான்
- காஸ்யப – கிஸு°ள்வான்
- த3தீ4ச – ஜகு3வான்
- தே3வல – ஸம்பா4ரவான்
- அஸித – மேருவான்
- ஸௌபரி – ஸாப3லவான்
- வைஸம்பாயன – ராணவான்
- ஸாண்டி3ல்ய – கொங்கடிவான்
- கவஸ் – ஸொம்புவான்
- தூ3ர்வாஸ – காரிவான்
- மௌஞ்ஜயாயன – ஸ்ருங்கா3ரிவான்



### ஆங்கீ3ரஸ ரிஷி

- ஆங்கி3ரஸ – கணுமவான்
- மௌத்3க3ல்ய – பா4மவான்
- கௌத்ஸ – ராஜவான்
- கௌ3தம – கேத3ரிவான்
- கா3ர்கே3ய – ஹலித்வான்
- கண்வ – கின்னரிவான்
- பா4ரத்வாஜ – லகு3டு3வான்
- வாமதே3வ – ப4ண்டா3ரிவான்
- ஸரப4ங்க3 – அஜு°ல்வான்
- ஹரித – கீ3தவான்
- ப்ரமதி – ஹாரஸவான்

### பா4ர்க4வ ரிஷி

- பா4ர்கவ – பொ4கு4ளுவான்
- ச்யவன – மாடலவான்
- உஷ்ணீஷ – ஸார்ங்க3வான்
- ஔர்வ – வாமனவான்
- ஜமத3க3னி – கௌண்ட3வான்
- மைத்ரேய – காளவான்
- வாத்ஸாயன – ஜாத்ருவான்
- மாண்ட3வ்ய – ஜம்பு3வான்
- ஜாபா3லி – வேணுவான்
- மார்கண்டே3ய – ஸலகவான்
- வத்ஸ – ப4ல்லாதுவான்
- ஸ்ரீ வத்ஸ – குந்தளவான்
- பைலவ – தாளவான்
- ஜைமுனி – பொஸங்கி3வான்

### வஸிஷ்ட2 ரிஷி

- வஸிஷ்ட2 – மேளுவான்
- கௌண்டி3ண்ய – தூ4மாட்டிவான்
- ஸக்தி – ஸீமந்தவான்
- பராஸர – பொ4கு3னுவான்
- வ்யாஸ – க4னபடவான்
- உபமன்யு – க2ந்து3ல்வான்
- ப4கீரதி2 – ப3த3ரிவான்
- பிப்பல – ஸு°ரதானுவான்

### ஸௌனக ரிஷி

- ஸௌனக – மொல்கவான்
- ஹோத்ர – தா3ருவான்

இந்த நிலை மாற வேண்டும். நம் சமூக மக்களிடையே திருமண பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு ரிஷிபரம்பரையான நமது சமூகத்தை விருத்தியடையச் செய்ய வேண்டியது நமது தலையாயக் கடமையாகும் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்டால் இந்நோய் பரவலை கட்டுப்படுத்த முடியும்.

# அங்கீகாரத்திற்கு ஏங்கி அல்லல் படாதீர்கள்

No Expectations No Disappointments

SO SIMPLE



குடும்பம் ஆனாலும் சரி,
அரசியல் அமைப்புகள் ஆனாலும் சரி,
சமூக அமைப்புகள் ஆனாலும் சரி,
தொழில் சார்ந்த அமைப்புகள் ஆனாலும் சரி,

தான் பிறரால் பாராட்டப்பட வேண்டும்,
தான் பிறரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்,
தான் பிறரால் மதிக்கப்பட வேண்டும்,
தன் பெயரை முன்னிறுத்த வேண்டும்,
தனக்கு மேடையில் முன் வரிசையில் இருக்கை வேண்டும்,
தனது படம் அனைத்திலும் இடம் பெற வேண்டும்
இன்னும் பல்வேறு ஏக்கங்கள்....

இது போன்ற பல ஏக்கங்கள் எல்லா மனிதர்களின் அடிப்படையான உணர்வு ஆகும். பொதுவாக இவையனைத்தும் அங்கீகார ஏக்கம் எனலாம்.

இந்த ஏக்கம் சில நேரங்களில் கடன்காரனாக மாற்றி, தற்கொலை முயற்சி வரை கொண்டு சென்றுவிடுகிறது. தன்னை பிறர் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக, தன்னை வசதி உடையவர்களாக காட்டிக்கொள்வதற்காக தனது வசதியை மீறி கார், ஸ்மார்ட்போன் இவையெல்லாம் கடனுக்கு வாங்கி சமூக கட்டமைப்பில் அந்தஸ்து உடையவர்களாக காட்டிக்கொண்டு அதன் மூலம் மற்றவர்களது அங்கீகாரத்தை பெற முயன்று இறுதியில் அதை சமாளிக்க முடியாமல் திணரும் அன்பர்கள் பலர்.

இதில் ஒரு கஷ்டமான சூழல் என்னவெனில் இவர்களுக்கு கஷ்டம் வரும் நேரத்தில் இது போன்ற அந்தஸ்து காட்டி இணைந்த நண்பர்களிடம் உதவியும் கேட்க முடியாமல் தனது துன்பங்களை பகிர்ந்துகொள்ள முடியாமல் அல்லல்படும் அன்பர்களும் இருக்கிறார்கள். அவர்களிடம் பகிர்ந்து கொண்டால் அவர்களது நட்பு போய்விடும் என மறைக்கவே முயன்று அதை சரி செய்ய மேலும் மேலும் கடன் பெற்று சமாளிக்க வேண்டிய மனக்கஷ்டமான நிலை ஏற்படுகிறது.

இந்த மனநிலைக்கு காரணம் சிறு வயதிலிருந்து நாம் வளர்த்து வந்த பழக்க நிலைதான் தன்னை மற்றவர் கவனிக்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் மேற்கண்ட நடவடிக்கைகளும் காரணம் ஆகும். தான் பிறரால் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனும் ஏக்க நிலையை உருவாக்குகிறது. நாம் எதை செய்தாலும் மற்றவருடைய அங்கீகாரத்திற்கான எதிர்பார்க்கும் போக்கு நம்மை பாதிப்புக்குள்ளாக்குகிறது.

**இதை தவிர்க்க எளிய பயிற்சி... நாம் எந்த செயலை செய்தாலும் மற்றவருடைய பாராட்டுதலை எதிர்பார்க்காமல், இச்செயல் இப்பிறப்பின் கடன் என பணி செய்தல்.**

**எதிர்பார்ப்புகளை குறைத்துக்கொண்டு, மற்றவர்களது விமர்சனங்களுக்கு ஆசைப்படாமல் வாழ்வை பயணிப்போம்.**

**- கே.கே. குபேந்திரன்**


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award

ROYAL ROMANTIC
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்
"ஷர்வ ரக்சன்" MRS
BEST NUMEROLOGIST
பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்
FOR APPOINTMENT
98421 11411





Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





# ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj®

RIGID PVC PIPES,FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...





# மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

DASU SINCE 1993

# நியூ தாசு மெட்டல்ஸ்

# NEW DASU METALS

25 Years ANNIVERSARY

BRASS AND COPPER POOJA ARTICLES, UTENSILS, STATUES, WHITE METAL HANDICRAFTS, SS VESSELS, TROPHIES, SHIELDS AND GIFT ARTICLES.

254, KAMARAJAR SALAI (NEAR ARASAMARAM), MADURAI - 09)

☎ 0452 4368753 | New Dasu Metals | newdasumetals

www.newdasumetals.com



LAABH

SAMACHAR

MULTI COLOR ADVT.

Contact: 9344197952



RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.10.2020 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

info@onvgprint.com
+91 95 97 775 775

FOLLOW US ON

visit :
www.onvgprint.com

எல்லா விதமான பிரிண்டிங் தேவைக்கு....

onVGPrint

— A unit of VIGNESH GRAPHICS —

79-A, South Marret Street,
Madurai - 625 001.

33, Manjanakara Street,
Madurai - 625 001.

48/5, TNHB Colony,
Mela Anuppanadi, Madurai - 625 001.

Mobile : 93441 01432, 98434 14310
Email : vgmadurai1@gmail.com

VALE SPECIALTY ORTHO CLINIC
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.
Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்



Dr. K.N. SUBRAMANIAN MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

கைத்தறியில் ஓர் புதுமை
Electronic Jacquard



Technical Details :

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm



Applications :
● Sarees ● Bed Sheets ● Furnishing ● Dress Material
● Blankets ● Made Ups ● Shirting



N.S. Rajan

SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001. Email: sourashtra.chamber@gmail.com
Ph: 0452 2629955, Cell: 9344197952 Web: www.sourashtrachamber.org